03.12.15

# தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## அடுத்த 3 நாட்களுக்கு மழை: இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்

புதுடில்லி: தமிழகத்தில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## ஒரு கிலோ முள்ளு கத்திரிக்காய் ரூ.500 தக்காளி விலை குறைந்தது

வேலுார்: ஆந்திராவில் இருந்து தக்காளி வரத்து அதிகரித்த தால், தக்காளி விலை வீழ்ச்சியடைந்தது. ஆனால், முள்ளுக் கத்திரிக்காய் வரத்து குறைந்ததால், வரலாறு காணாத வகையில் விலை உயர்ந்துள்ளது. ஒரு கிலோ, 300 ரூபாயிலிருந்து, 500 ரூபாய் வரை விற்பனையாகிறது. தமிழகத்தில் தொடர்ந்து பெய்து வரும் கன மழையால், காய்கறி உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், வேலுார் நேதாஜி காய்கறி மார்க்கெட்டுக்கு, சில வாரமாக காய்கறி வரத்து குறைந்துள்ளது. இரண்டு நாட்களுக்கு முன் வரை, தக்காளி, முருங்கக்காய், கிலோ, 50 ரூபாய்; கத்திரிக்காய், 60 ரூபாய்க்கு விற்பனையானது.இந்நிலையில், ஆந்திரா வில் பெய்து வரும் தொடர் மழையால், தக்காளி அழுகிவிடும் என்பதால், ஒரு வாரத்துக்கு முன்பே அறுவடை செய்து விட்டனர். இதனால், வேலுார் காய்கறி மார்க்கட்டுக்கு தக்காளி வரத்து அதிகரித்து உள்ளது. தினமும், 10 டன் தக்காளி வந்த நிலையில், நேற்று, 150 டன் தக்காளி வந்தது. இதனால் தக்காளி விலை அதிரடியாக குறைந்தது. கிலோ, 50 ரூபாய்க்கு விற்பனையான தக்காளி, வரத்து அதிகரிப்பால், தற்போது கிலோ, 5 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதே சமயம், உள்ளூரில் விளையக் கூடிய முள்ளுக்

கத்திரிக்காய், தொடர் மழை காரணமாக, அழுக துவங்கியுள்ளது. தினமும், 200 டன் முள்ளு கத்திரிக்காய் விற்பனைக்கு வரும். ஆனால், நேற்று, 5 டன் மட்டுமே விற்பனைக்கு வந்தது. இதனால், முள்ளு கத்திரிக்காய் கிலோ, 300 முதல், 500 ரூபாய் வரை விற்பனையாகிறது. தொடர் மழைக்கு, சிக்கன், மட்டன் பிரியாணி விற்பனை அதிகரித்துள்ளதால், அதற்கு தொட்டுக் கொள்ள, முள்ளுக்கத்திரிக்காய் பச்சடி கொடுப்பதால், இதன் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் கூறுகின்றனர்.

### ஏறிய வேகத்தில் இறங்கிய காய்கறி

ஒட்டன்சத்திரம் :மழை காரணமாக சென்னை உட்பட பல மாவட்டங்களுக்கு காய்கறிகளை அனுப்ப முடியாததால், ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் தக்காளி, புடலை, வெண்டைக்காய் விலை ஏறிய வேகத்தில் இறங்கின. ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வியாபாரிகளால் மொத்தமாக கொள்முதல் செய்யப்படும் காய்கறிகள், கேரளா மற்றும் சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் பிற பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. தக்காளி, புடலை, வெண்டைக்காய் உள்ளிட்ட காய்களை தமிழக வியாபாரிகள் தான் அதிகமாக வாங்குவர்.கடந்த சில நாட்களாக, சென்னை, காஞ்சிபுரம் உட்பட தமிழகத்தின் பல மாவட்டங்களில் கன மழை பெய்து வருகிறது. சென்னைக்கு செல்லும் ரோடுகள் வெள்ளத்தில் மூழ்கியதால் காய்கறிகள் அனுப்பி வைக்க முடியவில்லை. இதனால் வரத்து குறைவாக இருந்த போதிலும் காய்கறி விலை ஏறிய வேகத்தில் சறுக்கியது. கடந்த ஞாயிறன்று ஒரு கிலோ புடலை ரூ.25க்கு விற்றது. இதன் விலை கிலோவிற்கு ரூ.10 வரை குறைந்து ரூ.15க்கு விற்றது. இதேபோல் கிலோ ரூ.26க்கு விற்ற வெண்டைக்காயின் விலையும் ரூ.16 ஆக குறைந்தது. கடந்த சில நாட்களுக்கு முன்பு கிலோ ரூ.35க்கு விற்ற தக்காளி, ரூ.15க்கு விற்றது.

## மலர்க் கண்காட்சிக்கு தயாராகும் கொடைக்கானல்



கொடைக்கானல்:கொடைக்கானல் பிரையன்ட் பூங்காவில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள மலர்கண்காட்சிக்காக பிரையன்ட் பூங்காவில் வீரிய ஒட்டு ரக மலர்களுக்கான நாற்றுக்கள் நடவு செய்யப்பட்டு வருகின்றன. இங்குள்ள பிரையன்ட் பூங்காவில் ஆண்டுதோறும் கோடை கால சீசனில் மலர்க்கண்காட்சி நடத்தப்படுகிறது. வரும் ஆண்டு நடக்க உள்ள கண்காட்சிக்காக, பூங்கா பணியாளர்கள் நடவு பணிகளை இப்போதே மேற்கொண்டு வருகின்றனர்.மேற்கு வங்கத்திலிருந்து டேலியா, சாமந்திபூ வீரிய ஒட்டு ரக மலர்கள், புனேயிலிருந்து மலர் விதைகள், மற்றும் பெங்களூருவிலிருந்து வரவழைக்கப்பட்ட நாற்றுகள் நடவு செய்யும் பணிகளில் ஈடுபட்டுஉள்ளனர்.கேலன்டிலா, சால்வியா, ஆன்டிரைனம், ஆர்னத்திக் கோலம், ஆஸ்டர், சாமந்தி மலர்களில் பல வண்ணங்கள், அல்ஸ்டேராமேரியா, லுப்பின், மேரி கோல்டு, கிளியோம் போன்ற பல விதமான மலர்ச் செடிகளின் நாற்றுகள் நடப்பட்டு வருகின்றன. மேலும் 40 வகையான மலர்கள் வரவழைக்கப்பட்டு நடவு செய்யப்பட உள்ளது. தற்போது 110 மலர் பாத்திகளில் மலர்செடிகள் நடப்படுகின்றன.மூன்று லட்சம் நாற்றுக்கள்: கடந்த மலர்க் கண்காட்சியில் விதைகள் சேகரித்து, பின் அவற்றை விதைத்து நாற்றுகளை உருவாக்கினர். இப்படி 3 லட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டு, மே மாத மலர்கண்காட்சியில் பூத்துக் குலுங்கும்.தோட்டக்கலை துறை துணை இயக்குனர் கிஷோர் குமார் கூறியதாவது: புதிய யுத்திகளை

கையாண்டு ஆண்டு முழுவதும் பூக்கும் மலர்களின் நாற்றுகள் நடவு செய்யப்பட உள்ளன. சுற்றுலா பயணிகள் கவரும் வகையில் குழித்தட்டு முறையில் பசுமை குடில்கள் அமைத்து நாற்றுக்களை உற்பத்தி செய்தால் மலர்கண்காட்சியின் போது 5 லட்சம் மலர்கள் பூத்துக் குலுங்கும், என்றார்.

## நீலகிரியில் ஏற்பாடுகள் தயார்

ஊட்டி:நீலகிரிக்கு, கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், பேரிடரை எதிர்கொள்ள, நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. மாவட்டத்தில் தாழ்வான பகுதிகளாக, 194 இடங்கள்; நிலச்சரிவுக்கு வாய்ப்புள்ளதாக, 26 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அங்கு வசிக்கும் மக்கள், கனமழை காலங்களில், பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## விருதுநகரில் 7 மணி நேரமாக மழை

விருதுநகர்: விருதுநகர் மாவட்டம் சிவகாசி, காரியாப்பட்டி, ராஜபாளையம், விருதுநகர் மற்றும் சுற்று வட்டாரப்பகுதிகளில் கடந்த 7 மணி நேரமாக கனமழை பெய்து வருகிறது.

## தேதி வாரியாக மழை எப்படி

டிச., 3, 4, 5: தமிழக கடலோர மாவட்டங்கள், புதுச்சேரியில், மிதமான மற்றும் மிக கன மழை பெய்யும். தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்யும். டிச., 6: தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மிதமான மற்றும் மிக கன மழை பெய்யும்.சென்னையில் மேக மூட்டத்துடன் காணப்படும். பல இடங்களில் கன மழை பெய்யும்; காற்று வேகமாக வீசும்.

## தாம்பரத்தில் 49.42 செ.மீ., மழை

காஞ்சிபுரம்: காஞ்சிபுரம் மாவட்டத்தில், நேற்று, காலை வரை பதிவான மழை நிலவரப்படி அதிகபட்சமாக தாம்பரத்தில் 49.42 செ.மீட்டரும், குறைந்தபட்சமாக காஞ்சிபுரத்தில் 17.3 செ.மீட்டரும் பதிவாகியுள்ளது.

## செம்பரம்பாக்கத்தில் 47.5 செ.மீ., மழை

திருவள்ளூர்:திருவள்ளூர் மாவட்டத்தில், நேற்று, காலை 6:00 மணி நிலவரப்படி, 386.6 செ.மீட்டர் மழை பதிவாகியது.அதில், அதிகபட்சமாக செம்பரம்பாக்கத்தில் 47.5 செ.மீட்டர் மழையும், குறைந்தபட்சமாக, ஆர்.கே.பேட்டையில் 6.3 செ.மீட்டரும் பதிவாகி உள்ளது.

## ஸ்ரீவில்லிபுத்தூர், தஞ்சையில் கனமழை

தஞ்சை : தஞ்சாவூர், ஒரத்தநாடு, உளூர், பாபாநாடு ஆகிய பகுதிளிலும், ஸ்ரீவில்லிபுத்துார் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளிலும் நள்ளிரவு முதல் கனமழை பெய்து வருகிறது.

## டெங்கு, மலேரியா கொசுவைஅழிக்கும் 'கம்பூசியா மீன்கள்

ராமேஸ்வரம் :ராமேஸ்வரம் தீவில் டெங்கு, மலேரியா கொசுக்களை அழிக்கும் 'கம்பூசியா' மீன்களை சேகரித்து நீர் நிலையில் விடும் பணியில் சுகாதார ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். மழை காலத்தில் பொதுமக்களை தாக்கும் டெங்கு, மலேரியா காய்ச்சலை தடுக்க, ராமநாதபுரம் மாவட்ட சுகாதாரதுறை தீவிர களபணியில் ஈடுபட்டுள்ளது. டெங்கு பரப்பும் 'ஏடிஸ்', மலேரியா பரப்பும் 'அனாபிளஸ்' கொசுக்கள் நல்ல தண்ணீர் நிறைந்த குளம், கிணற்றில், நீர் தேக்க குட்டையில் முட்டையிடும். இதில் இருந்து உருவாகும் லார்வாக்கள்(புழு), பின் கொசுவாக மாறி கொடிய காய்ச்சலை பரப்புகிறது. இந்த கொசுவின் லார்வாக்களை கிணற்றில் வாழும் 'கம்பூசியா மீன்கள்' உட்கொள்வதால் டெங்கு, மலேரியா உள்ளிட்ட மர்ம காய்ச்சல் பரவாமல் தடுக்கப்படுகிறது. மழைகாலம் என்பதால் தற்போது உருவாகிவரும் 'ஏடிஸ்', 'அனாபிளஸ்' கொசுக்களை ஒழிக்க, ராமநாதபுரம் மாவட்ட சுகாதாரத்துறை துணை இயக்குநர் பவானி உமாதேவி உத்தரவுப்படி, சுகாதார களபணியாளர்கள் 50 பேர் குழுவாக பிரிந்து, ராமேஸ்வரம், பாம்பன், தங்கச்சிமடம் பகுதியில் உள்ள குளம், கிணறு உள்ளிட்ட நீர்நிலைகளிலிருந்து 9,910 கம்பூசியா மீன்களை சேகரித்தனர். அவற்றை 1500 தனியார், பொது கிணறுகள், தென்னந்தோப்பு நீர் தேக்க குட்டை, குளங்களில் விட்டனர். இந்த பணியின் மூலம் ராமேஸ்வரம்

தீவில் 80 சதவீதம் மலேரியா, டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க முடியும் என சுகாதார ஊழியர்கள் தெரிவித்தனர்.

**மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ திருவண்ணாமலையில் இருந்து பிரட் சப்ளை**

திருவண்ணாமலை: சென்னையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள், அரசு பள்ளி, கல்லூரி மற்றும் சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உதவும் வகையில், திருவண்ணாமலை மாவட்டத்தில் இருந்து, பிரட் உள்ளிட்ட உணவு பொருட்கள், திருவண்ணாமலையில் இருந்து லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. தமிழகத்தில், கடந்த மாதம், 9ஆம் தேதி முதல், கன மழை பெய்து வருகிறது. கடலூர், திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், மாவட்டங்களில் ஏரி, அணைகள் நிரம்பியதாலும், ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்காலும், தாழ்வான இடங்களில் குடியிருப்புகளில் தண்ணீர் புகுந்துள்ளது. இதனால், பல இடங்களில் மக்கள் வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தொடர் மழையால், இவர்களுக்கு உணவு பொருட்கள் தயாரிக்கும் பணியும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு, உணவு பொருட்கள் வழங்க தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை நிலவுகிறது. இதை தவிர்க்கும் வகையில், பல்வேறு மாவட்டங்களில் இருந்து, பிரட் உள்ளிட்ட உணவு பொருட்களை கொள்முதல் செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆரணி, கலசப்பாக்கம், திருவண்ணாமலை, சேத்துப்பட்டு, போளூர், தண்டராம்பட்டு, செய்யாறு, வந்தவாசி உள்ளிட்ட, எட்டு தாலுகாக்களில் இருந்து, உணவு பொருட்களை அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து, இங்கிருந்து பிரட் உள்ளிட்ட உணவு பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அவை லாரி மூலம், நேற்று அதிகாலை சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த உணவு பொருட்கள் சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு வழங்கப்பட உள்ளது.

## வந்தவாசியில் கன மழையால் 20 கிராமங்கள் துண்டிப்பு: வெள்ளம் பாதித்த பகுதி மக்கள் பாதுகாப்பாக தங்க ஏற்பாடு

திருவண்ணாமலை: வந்தவாசியில் பெய்து வரும் கனமழையால், 20க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால், பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். பல இடங்களில் குடியிருப்புகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால், மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு, பல்வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி உள்பட பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இதனால், அருகே உள்ள, ஓசூர் பூதேரி ஏரி நிரம்பியுள்ளது. ஏரியில் இருந்து உபரி நீர் அதிகளவு வெளியேற்றப்படுகிறது. நேற்று முன்தினம் மாலை முதல், ஒரத்தி சாலையில் உள்ள தரைப்பாலத்தில், 3 அடிக்கு மேல் வெள்ளம் ஓடுகிறது. இதனால், இரவு முதல் அவ்வழியாக பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இதனால், வெண்மந்தை, எட்டிகுட்டை, காவனியாத்தூர், அமுதூர், வேப்பரங்கரனை, கீழ்செம்பேடு, மூடூர், ஒரத்தி உள்ளிட்ட, 15க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. அதேபோல், இளங்காடு ஏரி நிரம்பி, உபரி நீர் அதிகளவு வெளியேறுவதால், பொன்னூர் - ஆராத்தூர் சாலையிலும் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் பொன்னூர், கீழ்புத்தூர், சோரப்புத்தூர், நல்லேரி, இளங்காடு, ஆகிய கிராமங்களுக்கு போக்குவரத்து இல்லாமல், பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். வெண்குன்றம் கிராமத்தில் உள்ள பெரிய ஏரி நிரம்பி வழிவதால், அம்பேத்கர் நகரில் உள்ள, 50க்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது. மேலும் பாதிரி, பிருதூர், மங்க நல்லூர் ஏரிகள் வழியாக வழூவூர் ஏரிக்கு தண்ணீர் செல்கிறது. ஏற்கனவே அந்த ஏரிகளில் தண்ணீர் நிரம்பியுள்ளதால், உபரி நீர் வெளியேறி ஊருக்குள் புகுந்துள்ளது. இதனால், 100க்கும் மேற்பட்ட வீடுகளை வெள்ளம் சூழ்ந்தது. இதனால் பாதிக்கப்பட்ட பொதுமக்களை மீட்கப்பட்டு, பள்ளி, சமுதாய கூடம் மற்றும் கோவில்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். வந்தவாசி டவுன் எள்ளுபாறை, சைதாண்டி தர்கா பகுதிகளில், சுகநதி வெள்ள நீர்

புகுந்ததால், 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வந்தவாசி தாலுகாவில் உள்ள, மேல் செம்பேடு, ஜப்திகாரணி, மருதாடு, கீழ்குவளைவேடு, வெண்குன்றம், அதியனூர், மோடூர், அதியங்கப்பம், கொட்டை ஆகிய கிராமங்களில் மழை வெள்ளம் சூழ்ந்துள்ளது. பாதிக்கப்பட்ட, 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினரை வருவாய்த்துறையினர் மீட்டு, அருகில் உள்ள பள்ளி, சமுதாய கூடங்களில் தங்க வைத்துள்ளனர். அவர்களுக்கு உணவு மற்றும் நிவாரண உதவி வழங்கப்பட்டு வருகிறது.

**மீண்டும் மழை எச்சரிக்கை: கலெக்டர் அவசர ஆலோசனை**

திருவண்ணாமலை: திருவண்ணாமலை மாவட்டத்தில், மழை பாதிப்பு மற்றும் முன்னேற்பாடுகள் குறித்து, அனைத்து துறை அதிகாரிகளுடன், கலெக்டர் ஞானசேகரன் ஆலோசனை நடத்தினார். திருவண்ணாமலை மாவட்டத்தில், வடகிழக்கு பருவ மழை சராசரியாக 439.மி.மீ., மழை பெய்யும். ஆனால், இந்தாண்டு இதுவரை, 785 மி.மீ., மழை பெய்துள்ளது. பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள, 600 ஏரிகளில், இதுவரை, 414 ஏரிகள், 100 சதவீதம் நிரம்பியுள்ளன. மற்ற ஏரிகள், 75 சதவீதம் நிரம்பியுள்ளன. ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள, 700 ஏரிகளில், 500 ஏரிகள் முழு கொள்ளளவை எட்டியுள்ளன. இந்நிலையில், இதுவரை மழையால், 4,589 வீடுகள் சேதமடைந்தன, 189 மாடுகள் பலியாகியுள்ளன. மாவட்டம் முழுவதும், 55 முகாம் அமைத்து, 3,048 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மழையால், 200 கோடி ரூபாய் அளவிலான பொருட்கள் சேதமடைந்துள்ளன.

திருவண்ணாமலை மாவட்டத்தில், மேலும், 5 நாட்கள் மழை பெய்யும் என, எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து கலெக்டர் ஞானசேகரன் தலைமையில், நேற்று முன்தினம் இரவு, 11 மணிக்கு அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்ட அவசர ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில், வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் போலீசார் கலந்து கொண்டனர். அப்போது, மேற்கொள்ள வேண்டிய நிவாரண பணிகள் குறித்து, அனைத்து துறை அதிகாரிகளுக்கும் கலெக்டர் ஞானசேகரன் அறிவுரை வழங்கினார். இந்நிலையில், நேற்று கலெக்டர் ஞானசேகரன் மற்றும்

அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன் ஆகியோர், ஆரணி, செய்யாறு, வந்தவாசி, ஆகிய பகுதிகளில் நேரடியாக ஆய்வு செய்து, வீடுகளில் மழை நீர் புகுந்துள்ள பகுதியில் வசிப்பவர்களை, பாதுகாப்பாக முகாமிற்கு அனுப்பி வைத்தனர்.

**வீடூர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்ததால் உபரி நீர் வெளியேற்றம்**

விக்கிரவாண்டி: வீடூர் அணைக்கு வரலாறு காணாத வகையில் நீர் வரத்து அதிகரித்ததால், அணையிலிருந்து 30 ஆயிரத்து 400 கன அடி உபரி நீர் வெளியேற்றப்பட்டது. அணை பகுதியில் அதிகாரிகள் தொடர்ந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். விக்கிரவாண்டி அருகே உள்ள வீடூர் அணை நீர்மட்டம், கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த கன மழை காரணமாக, கிடுகிடுவென உயர்ந்தது. கடந்த 23ம் தேதி அணை முழு கொள்ளவான 32 அடி நீர் மட்டத்தை(605<<< மில்லியன் கன அடி) எட்டியது. இதையடுத்து உடனடியாக அணையின் 9 ஷெட்டர்களும் திறக்கப்பட்டு, உபரி நீரை வெளியேற்றப்பட்டது.

அணைக்கு நீர் வரத்து வரக்கூடிய பகுதியான, செஞ்சியில் நேற்று முன்தினம் இரவு கன மழை பெய்தது. இதனால், நேற்று காலை 6:00 மணியளவில் அணைக்கு நீர் வரத்து வினாடிக்கு19 ஆயிரத்து 300 கன அடியாக இருந்த நீர் வரத்து, காலை 11:00 மணியளவில் 30 ஆயிரத்து 400 கன அடியாக அதிகரித்தது. அணையின் பாதுகாப்பு கருதி 9 ஷெட்டர்களும் 5 அடி அளவில் திறந்து, உபரி நீரை வெளியேற்றினர். அணைக்கு வரத்து வரக் கூடிய மேற்கு பகுதியில், நேற்று முன்தினம் இரவு கன மழை பெய்ததால், இது வரை அணைக்கு நீர் வரத்து, வரலாறு காணாத வகையில் 30 ஆயிரத்து 400 கன அடியை தொட்டது. இதுவே அணைக்கு அதிகமாக வந்த நீர் வரத்து என அதிகாரிகள் தரப்பில் தெரிவித்தனர் . பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சண்முகம் தலைமையில் உதவி செயற்பொறியா ளர் கவுதமன், உதவி பொறியா ளர்கள் கபிலன், சாந்தி, செல்வி, பணியாளர்கள் சகாதேவன், முருகன் ஆகியோர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வீடூர் அருகிலுள்ள கிராம பொதுமக்கள் ஆவலுடன் அணையை பார்வையிட குவிய ஆரம்பித்தனர். பாதுகாப்பு கருதி சுற்றுலா பயணிகளையும், கிராம பொதுமக்கள்

மற்றும் வாகனங்களை போலீசார் தடுத்து நிறுத்தினர். இதையடுத்து அருகிலுள்ள கிராம மக்கள், நிலத்து வழியாக நடந்து சென்று அணையை குழந்தைகளுடன் பார்வையிட்டனர். இதனால் போலீசார் செய்வதறியாது திகைத்தனர் .

ரோந்து பணி : விக்கிரவாண்டி இன்ஸ்பெக்டர் ராஜன் தலைமையில் சப்-இன்ஸ்பெக்டர்கள் மோகனமுத்து, ரமேஷ்பாபு, சீத்தாபதி, முருகன் மற்றும் போலீசார் கரையோர கிராமங்களில் ரோந்து சென்றனர். மேலும், கிராம பொதுமக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்தனர்.

## மாவட்டத்தில் தொடரும் கனமழை 701 ஏரிகளில் தண்ணீர் நிரம்பியது

விழுப்புரம்: தொடர் கன மழையால் மாவட்டத்தில் 701 ஏரிகளில் தண்ணீர் நிரம்பி மதகுகள் வழியாக வெளியேற்றப்படுகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் 832 ஏரிகள் உள்ளது. இதில், கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து வரும் கன மழையால், நேற்று 701 ஏரிகள் நூறு சதவீதமும், 55 ஏரிகள் 75 சதவீதமும், 25 ஏரிகள் 50 சதவீதமும், 51 ஏரிகள் 50 சதவீதத்திற்கு கீழ் நிரம்பியுள்ளது. தண்ணீர் நிரம்பிய ஏரிகளின் பாதுகாப்பு கருதி மதகுகள் வழியாக தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.மேலும், தொடர்ந்து பெய்து வரும் கன மழையால் மீதமுள்ள 131 ஏரிகளில் விரைவில் தண்ணீர் நிரம்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

## மரக்காணத்தில் 36 மி.மீ., மழை

விழுப்புரம்: விழுப்புரம் மாவட்டத் தில், அதிகபட்சமாக, மரக்காணத்தில் 36 மி.மீ., மழையளவு பதிவாகி உள்ளது. விழுப்புரம் மாவட்டம் முழுவதும், நேற்று காலை 7:00 மணி முதல், மாலை 4:00 மணி வரை, பெய்த மழையளவு விபரம்: செஞ்சியில் 10.50 மி.மீ., திருக்கோவிலுாரில் 21.5, திண்டிவனத்தில் 16, விழுப்புரத்தில் 15, உளுந்துார்பேட்டையில் 7, வானுாரில் 23, கள்ளக்குறிச்சியில் 6.6, மரக்காணத்தில் 36 மி.மீ., மழை பதிவானது.

வானூர் தாலுகா, பூத்துறையைச் சேர்ந்த ஆனந்த், 35, என்பவரின் மீது, அவரது வீட்டின் சுவர், நேற்று முன்தினம் இரவு இடிந்து விழுந்ததில், சம்பவ இடத்திலேயே இறந்தார். தொடர் மழையால் வீடுகளை இழந்து பாதிப்பிற்குள்ளான, திண்டிவனம் தாலுகா, சிறுகடம்பூரைச் சேர்ந்த 70 பேர் அங்கன்வாடி மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அரசு சார்பில் உணவு வழங்கப்படுகிறது. இதேபோல் காட்ராம்பாக்கத்தில் 20 பேர், அங்குள்ள அங்கன்வாடி மையத்திலும், ஆச்சிப்பாக்கத்தில் 76 பேர், ஆதிதிராவிடர் நலப் பள்ளியிலும், சலவாதியில் 160 பேர், அங்குள்ள அங்கன்வாடி மையத்திலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாவட்டம் முழுவதும் வயல்வெளிகளில் தண்ணீர் குளம்போல் தேங்கி நிற்பதால், விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர்.

### மேட்டூர் அணை நீர்இருப்பு 37 நாளில் 30 டி.எம்.சி., உயர்வு

மேட்டூர்: மேட்டூர் அணை நீர்இருப்பு கடந்த, 37 நாளில், 30 டி.எம்.சி., அதிகரித்துள்ளது. டெல்டாவில் பருவமழை நீடிப்பதால், நீர் இருப்பு மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. மேட்டூர் அணை நீர்மட்டம் கடந்த, அக்.,25ம் தேதி, 60.5 அடியாகவும், நீர் இருப்பு, 25 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து நீர்வரத்து அதிகரித்ததால், நேற்று அணை நீர்மட்டம், 92.7 அடியாகவும், நீர் இருப்பு, 55.8 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது. நேற்று அணைக்கு வினாடிக்கு, 7,991 கனஅடி நீர்வந்தது. கடந்த, 37 நாளில் அணை நீர்மட்டம், 32 அடியும், நீர் இருப்பு, 30 டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. டெல்டாவில் கனமழை நீடிப்பதால், மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு நீர்திறக்க மேலும் தாமதம் ஆகும். அணை நீர்மட்டம் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

## தொடரும் மழையால் நெல் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் தவிப்பு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், தொடர் மழை பெய்து வருவதால், நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், அணை, ஏரிகள் மற்றும் விவசாய கிணறுகள் மூலம், ஆண்டுக்கு, சம்பா, நவரை, காரி பருவம் மூலம், 20,500 ஹெக்டரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. அதில், பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், தர்மபுரி ஆகிய தாலுகாக்களில், நெல் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக, சம்பா பருவத்தில், 15 ஆயிரம் ஹெக்டேரில், நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இந்தாண்டு, சம்பா பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெல் அறுவடைக்கு வந்த நிலையில், மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால், அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், மாவட்டத்தில் அறுவடைக்கு தயாராக இருந்த நெல், நிலத்தில் சாய்ந்து, அதில் தேங்கியுள்ள நீரால், முளை விட்டு வருகின்றன. இதனால், விவசாயிகளுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. எனவே, மாவட்டம் முழுவதும், நெல் சாகுபடியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு, உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என, விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில், மழையால் பாதிக்கப்பட்டுள்ள நெல் உட்பட பல்வேறு வேளாண் பயிர்கள் குறித்து, முதல் கட்டமாக கணக்கெடுக்கப்பட்டதில், 650 ?ஹக்டரில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. இதற்கான நிவாரணம் கேட்டு, அரசிடம் அறிக்கை அனுப்பட்டுள்ளது. மேலும், மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பயிர் சேதம் குறித்து, தொடர்ந்து கணக்கெடுக்கப்பட்டு வருவதாக, மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சந்தன மர விதைகள் விதைப்பு பணி துவக்கம்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வனப்பகுதியில் சந்தன மரங்களை வளர்க்கும் திட்டத்தின் கீழ், பள்ளி மாணவர்கள் மூலம் சந்தன மர விதைகள் நேர்த்தி செய்யப்பட்டு, விதைக்கும் பணிகள் துவங்கியது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியில், 3,200 ஹெக்டேரில் 55 ஆயிரம் சந்தன மரக்கன்றுகள் நடவு செய்யும் திட்டத்தை, தமிழக முதல்வர் ஜெயலலிதா சட்டசபையில் அறிவித்தார். இதன்படி, மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியில், சந்தன மரக்கன்றுகள் வளர்க்கும் திட்டத்தை செயல்படுத்த, வனத்துறையினர், முதல்கட்ட நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். இதற்காக நேர்த்தி செய்யப்பட்ட சந்தன மரவிதைகளுடன், சீதா மற்றும் துவரை விதைகளை கலந்து ஈரப்பதம் காக்கும் ஜெல் ஆகியவற்றை கொண்டு, மண் மற்றும் சாணத்துடன் கலந்து, அரசு பள்ளி மாணவர்கள், மலை வாழ் மக்கள் மற்றும் வனப்பணியாளர்களை கொண்டு, உருண்டையாக பிடிக்கும் பணி, கிருஷ்ணகிரி வனச்சரக அலுவலகத்தில் துவங்கியது. இந்த பணியை, தர்மபுரி மண்டல வனபாதுகாவலர் உலகநாதன், மாவட்ட வன அலுவலர்கள் ராஜேந்திரன், பன்னீர்செல்வம், கிருஷ்ணகிரி வனச்சரக அலுவலர் பாபு ஆகியோர் பார்வையிட்டு, சந்தன மர விதைகளை, வனப்பகுதியில் விதைக்கும் முறைகள் குறித்து விளக்கி கூறினர். மேலும், சந்தன மர விதைகள் விதைப்பு பணியில் ஈடுபடும் மாணவர்களுக்கு, சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளது. சந்தன மர விதைகள் விதைப்பு பணி, ஒரு மாத காலத்தில் முடிக்கப்பட்டு, செடிகள் வளர்ந்த பின்பு வனத்துறையினர் மூலம் கண்காணிப்பு பணி மேற்கொண்டு, ஒவ்வொரு செடியும் பத்திரமாக வளர்க்கப்படும் என, வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## டெல்டாவைப் போல் ஈரப்பதத்தில் நெல் கொள்முதல்

கோபி: மழைக்குள் அறுவடை பணி சிக்கியிருப்பதால், காவிரி டெல்டா மாவட்டங்களில் இருப்பதைப் போல், நெல்லின் ஈரப்பத அளவை அதிகமாக கொள்முதல் செய்ய, முதல் போக கோபி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோபி கொடிவேரி அணையின், இடதுபுறம் அரக்கன்கோட்டை வாய்க்காலும், வலதுபுறம் தடப்பள்ளி வாய்க்கால் மூலமும், மொத்தம், 24 ஆயிரத்து, 504 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. கடந்த ஜூலை, 31ல் முதல் போகத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இதைக் கொண்டு, கோபி வட்டாரத்துக்கு உட்பட்ட, 17 கிராமங்களில் மொத்தம், 2,870 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த மாத, இறுதியில் பெய்த தொடர் மழையால், கோபி வட்டாரத்தில், 500 ஹெக்டேர் நெற்பயிர் சேதம் அடைந்தது. மழையால், அறுவடையும் பாதித்தது. இரு பாசன சபைகளிலும், முதல் போகத்துக்கு தாமதமாக தண்ணீர் திறந்ததே, இதற்கு காரணம் என்றும், விவசாயிகள் புலம்பி வருகின்றனர். இதுபற்றி விவசாய அமைப்பினர் சிலர் கூறியதாவது: வாய்க்கால் லைனிங் பணியால், தண்ணீர் திறப்பு தள்ளிபோனது. இதனால் முதல்போக அறுவடை மழைக்குள் சிக்கியுள்ளது. எனவே நெல்லின் ஈரப்பத சதவீதத்தை அதிகப்படுத்தி கொள்முதல் செய்ய வேண்டும். காவிரி டெல்டா பாசன விவசாயிகளுக்கு இணையாக, ஈரப்பத அளவை ஓரிரு சதவீதத்தை அதிகமாக்கி, கொடிவேரி பாசன விவசாயிகளிடமும் நெல் கொள்முதல் செய்ய வேண்டும். அப்போது தான் விவசாயிகள் பயனடைவர். இவ்வாறு கூறினர்.

## கோடி ஈ புகார்: கோழிப்பண்ணையில் ஆய்வு

சென்னிமலை: சென்னிமலை அருகே புகாருக்கு உள்ளான கோழிப்பண்ணையை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். சென்னிமலை ஒன்றியத்திற்கு உட்பட்ட, ஓட்டப்பாறை கிராம பஞ்சாயத்து மேலப்பாளையத்தில், கோழிப்பண்ணை ஒன்று இயங்கி வருகிறது. இதனால், துர்நாற்றம் வீசுவதாகவும், கழிவுகளில் இருந்து கோடிக்கணக்கான ஈக்கள்

உற்பத்தியாகி, பல்வேறு நோய்கள் பரவுவதாக, ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் நடந்த மக்கள் குறைதீர் கூட்டத்தில், அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்திருந்தனர். இந்நிலையில், கலெக்டர் பிரபாகர் உத்தரவின்படி, கால்நடை பாரமரிப்புதுறை மண்டல இணை இயக்குனர் ரவிச்சந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குனர் ரமேஷ்குமார், பொது சுகாதாரத்துறை துணை இயக்குநர் பாலுசாமி, ஆகியோர் நேற்று கோழிப்பண்ணைக்கு நேரில் சென்று ஆய்வு செய்தனர். கோழிப்பண்ணை கழிவுகளால், மக்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம், இயக்க உரிய அறிவுரைகள் வழங்கினர். மேலும், பொது சுகாதாரத் துறை சார்பாக அனைத்து தெருக்களுக்கும் பிளிச்சீங் பவுடர் இடப்பட்டும், புகை தெளிப்பான் மூலம் கொசு மருந்தும் தெளிக்கப்பட்டு, தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

## விட்டு விட்டு பெய்யும் மழை: கட்டு கட்டாக சோளத்தட்டு நாசம்

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் விவசாயிகள், அதிக அளவில் கால்நடை வைத்துள்ளனர். தீவனமும் அதிகம் தேவைப்படுகிறது. இதனால், வயல்களில் சோளப்பயிர் நடவு செய்திருந்தனர். சோளப்பயிரை அறுவடை செய்து வயல்களில் சிறு, சிறு கட்டுகளாய் கட்டி வெயிலில் நன்றாக காய வைத்து, ஓர் இடத்தில் குவித்து போர் அமைப்பர். இந்நிலையில், அறுவடை செய்து, வெயிலில் காய வைக்கப்பட்டிருந்த, சோளப்பயிர் கட்டுக்கள், நேற்று உட்பட கடந்த சில நாட்களாக விட்டு, விட்டு பெய்து வரும் மழையால், நாசம் அடைந்துள்ளது. இதனால் கால்நடைகளுக்கு, தீவன தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

## டெல்டாவைப் போல் ஈரப்பதத்தில் நெல் கொள்முதல்

கோபி: மழைக்குள் அறுவடை பணி சிக்கியிருப்பதால், காவிரி டெல்டா மாவட்டங்களில் இருப்பதைப் போல், நெல்லின் ஈரப்பத அளவை அதிகமாக கொள்முதல் செய்ய, முதல் போக கோபி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோபி கொடிவேரி அணையின், இடதுபுறம் அரக்கன்கோட்டை வாய்க்காலும், வலதுபுறம் தடப்பள்ளி வாய்க்கால் மூலமும், மொத்தம், 24 ஆயிரத்து, 504 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. கடந்த ஜூலை, 31ல் முதல் போகத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இதைக் கொண்டு, கோபி வட்டாரத்துக்கு உட்பட்ட, 17 கிராமங்களில் மொத்தம், 2,870 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த மாத, இறுதியில் பெய்த தொடர் மழையால், கோபி வட்டாரத்தில், 500 ஹெக்டேர் நெற்பயிர் சேதம் அடைந்தது. மழையால், அறுவடையும் பாதித்தது. இரு பாசன சபைகளிலும், முதல் போகத்துக்கு தாமதமாக தண்ணீர் திறந்ததே, இதற்கு காரணம் என்றும், விவசாயிகள் புலம்பி வருகின்றனர். இதுபற்றி விவசாய அமைப்பினர் சிலர் கூறியதாவது: வாய்க்கால் லைனிங் பணியால், தண்ணீர் திறப்பு தள்ளிபோனது. இதனால் முதல்போக அறுவடை மழைக்குள் சிக்கியுள்ளது. எனவே நெல்லின் ஈரப்பத சதவீதத்தை அதிகப்படுத்தி கொள்முதல் செய்ய வேண்டும். காவிரி டெல்டா பாசன விவசாயிகளுக்கு இணையாக, ஈரப்பத அளவை ஓரிரு சதவீதத்தை அதிகமாக்கி, கொடிவேரி பாசன விவசாயிகளிடமும் நெல் கொள்முதல் செய்ய வேண்டும். அப்போது தான் விவசாயிகள் பயனடைவர். இவ்வாறு கூறினர்.

**பனிக்காலம் வருவதற்கு முன்பு பசுந்தேயிலை பறிக்க ஆயத்தம்**

மஞ்சூர்: பனிப்பொழிவு ஏற்படுவதற்கு முன்பு, தேயிலை தோட்டங்களில் துளிர்விட்டுள்ள பசுந்தேயிலைகளை பறிக்க விவசாயிகள் ஆயத்தமாகியுள்ளனர்.

மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்தாண்டில் நவம்பர் மாதத்தில் துவங்கிய பனிப்பொழிவால், தேயிலை தோட்டங்களில் பல லட்சம் கிலோ பசுந்தேயிலை கருகி வீணானது. நடப்பாண்டில் நவம்பர் மாதம் இறுதியில், நீர் பனி தென்பட்டாலும், பரவலாக பெய்த மழையால், தேயிலை தோட்டங்களில் பசுந்தேயிலை துளிர்விட்டு, அறுவடைக்கு தயாராக உள்ளது.

தற்போது, டிசம்பர் மாதம் துவங்கியதால் எந்நேரத்திலும் சீதோஷ்ண நிலையில் மாற்றம் ஏற்பட்டு, பனிப்பொழிவு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால், தேயிலை தோட்டங்களில் அறுவடைக்கு தயாராக உள்ள பசுந்தேயிலையை பறிக்க விவசாயிகள் ஆயத்தமாகியுள்ளனர். சிறு விவசாயிகள் சங்க செயலாளர் பெள்ளி கூறுகையில், “பசுந்தேயிலைக்கான விலையில் முன்னேற்றம் இல்லை என்றாலும், பனிப்பொழிவு ஏற்படுவதற்கு முன்பு, தோட்டத்தில் அறுவடைக்கு தயாராக உள்ள பசுந்தேயிலையை பறிக்க விவசாயிகள் ஆயத்தமாகியுள்ளனர்,” என்றார்.

**பாரம்பரிய உணவு முறைக்கு மாறினால் நோய் பாதிப்புகளில் இருந்து தப்பலாம்**

ஊட்டி: 'ரத்த சோகை மற்றும் கேன்சர் நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவ தால், பாரம்பரிய உணவு முறைக்கு மாறுவது அவசியம்' என, தெரிவிக்கப்பட்டது. மாநிலத்தில், 'அனிமியா' எனப்படும் ரத்த சோகை, கேன்சர் நோய்கள் அதிகரித்து வரும் நிலையில், பாரம்பரிய, இயற்கை உணவு முறை ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. தோட்டக்கலை உட்பட அரசு துறைகளும், சில தனியார் துறைகளும், இயற்கை சாகுபடி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன. நீலகிரி உட்பட மாநிலம் முழுக்க, 'ஆரோக்யா' பவுண்டேஷன் என்ற அமைப்பினர், இயற்கை உணவு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். நீலகிரியில், பழங்குடியினர் அதிகம் வாழும் கூடலூர், கோத்தகிரி பகுதிகளில், இதுதொடர்பாக சிறப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

'ஆரோக்யா' பவுண்டேஷன் செயலர் செந்துார்பாரி கூறியதாவது:

ரத்தசோகை என்பது பல நோய்களுக்கு மூலக் காரணமாக உள்ளது. நாட்டில், 64 சதவீதம், தமிழகத்தில், 50 சதவீதம் பேருக்கு ரத்த சோகை உள்ளது. 'உலகில், கேன்சர் நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது' என, புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நோய்களுக்கெல்லாம் காரணம், உணவு முறை தான். ரசாயன உரங்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் காய்கறி, பயிர் வகைகளை உண்பதன் மூலம், பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. ராகி, கோதுமை, தினை, கம்பு, காய்கறி, பழங்கள், கீரை வகைகள் என, வீட்டு தோட்டங்களில் வளரும் காய்கறி, சிறு தானியங்களை உணவில் சேர்த்து கொள்ள வேண்டும் என, வலியுறுத்தி வருகிறோம்.

மாநிலம் முழுக்க, 1100 கிராமங்கள், நீலகிரியில், 10 கிராம பஞ்சாயத்துகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இயற்கை உணவு, பாட்டி வைத்தியம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு, செந்துார் பாரி கூறினார்

**தோட்டக்கலை சாகுபடி பயிற்சிகளில் வேகம், கிராம விவசாயிகளுக்கு புத்துணர்வு**

ஊட்டி: விவசாயிகள் மத்தியில், தோட்டக்கலை சாகுபடி பயிற்சிகள் வழங்கும் பணியில் வேகம் காட்டப்பட்டு வருகிறது. நீலகிரியில், தேயிலை விலை பிரச்னை, தோட்டப் பயிர் சாகுபடியில் மண் வளம், மார்க்கெட்டிங் உட்பட பிரச்னைகள் இருந்து வருகின்றன. இந்நிலையில், மாவட்ட தோட்டக்கலை உழவர் பயிற்சி நிலையம் சார்பில், தோட்டக்கலை சார்ந்த நிறுவனங்களை ஒருங்கிணைத்து, கிராமங்கள் தோறும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

* ஊட்டி மீக்கேரியில் நடந்த பயிற்சியில், ஊட்டி தோட்டக்கலை ஆராய்ச்சி மைய விஞ்ஞானி மாலதி, 'உபாசி' வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானி சுகுனா, வட்டார தொழில் நுட்ப மேலாளர் ரம்யா, உதவி தொழில்நுட்ப மேலாளர் ஜான்பாஸ்கோ, அஸ்வினி ஆகியோர் பயிற்சி வழங்கினர்.

தோட்டக்கலை பயிரில் நுண்ணீர் பாசனம் அமைத்தல், கைத்தெளிப்பான் பராமரிப்பு, கேரட் பயிரில் களையெடுத்தல் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. மீக்கேரி ஊர் தலைவர் ஜோகி, மீக்கேரி சிறு விவசாயிகள் சங்க தலைவர் அரசு, தோட்டக்கலை உதவி வேளாண் அலுவலர் ஜெகதீசன்

உட்பட பலர் பங்கேற்றனர். * கோத்தகிரி நெடுகுளாவில் நடந்த பயிற்சியில், தோட்டக்கலை ஆராய்ச்சி மைய விஞ்ஞானி மாலதி, சங்கர், வட்டார உதவி இயக்குனர் சித்ராபானு, உதவி தொழில்நுட்ப மேலாளர் ரேவதி பயிற்சி வழங்கினர். தேயிலையில் சிலந்தி பூச்சிகளை கட்டுப்படுத்துதல், பசுந்தேயிலை உற்பத்தி குறித்த செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. தோட்டக்கலை உதவி வேளாண் அலுவலர் ராமன் உட்பட பலர் பங்கேற்றனர்.

* கேத்தியில் நடந்த பயிற்சியில், உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குனர் ராம்சுந்தர், தோட்டக்கலை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பேசினார். கேத்தி ஊர் தலைவர் நஞ்சன், கேத்தி பேருராட்சி துணைத் தலைவர் சுதேவன் ஆகியோர் பேசினர். தமிழ்நாடு வேளாண் பல்கலை கழக தோட்டக்கலை ஆராய்ச்சி மைய விஞ்ஞானி கார்த்திகேயன், நவீன முறை காய்கறி சாகுபடி குறித்து பயிற்சி வழங்கினார். 'உபாசி' வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானி சுகுணா, மதிப்பு கூட்டப்பட்ட தேயிலை உற்பத்தி குறித்து பயிற்சி வழங்கினார். மாவட்ட வேளாண் விற்பனை துறையின் துணை இயக்குனர் வீரமணி, விற்பனை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், வேளாண் விற்பனை பொருட்களை சந்தைப்படுத்துதல் குறித்து பேசினார். விவசாயிகள், தோட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, செயல் முறை விளக்கம் அளிக்கப்பட்டது. குன்னூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் உமாராணி, 'அட்மா' திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஷீலா உட்பட பலர் பங்கேற்றனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை ஊட்டி உழவர் பயிற்சி மைய துணை இயக்குனர் ராம்சுந்தர், தோட்டக்கலை உதவி வேளாண்மை அலுவலர் சம்சுதீன் செய்திருந்தனர்.

**சிறப்பு கால்நடை சிகிச்சை முகாம் தாது உப்பு கலவை இலவசம்**

ஊட்டி: மாநில அரசின் உத்தரவுக்கேற்ப, மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதல் படி, ஊட்டி நகராட்சிக்குட்பட்ட காந்தள் பகுதியில், சிறப்பு இலவச கால்நடை சிகிச்சை முகாம் நடந்தது. மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் சண்முகவேல் தலைமை வகித்தார். கால்நடை பெருக்கம்

மற்றும் தீவன அபிவிருத்தி துணை இயக்குனர் தங்கவேலு முன்னிலை வகித்தார்.

இதில், பசு, செம்மறியாடு, வெள்ளாடு, கோழி, நாய், குதிரை போன்ற கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், நோயால் தாக்கப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை, உடல் ஆரோக்கியத்திற்கான தாது உப்பு கலவை வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன; 164 கால்நடைகளுக்கு சிகிச்சை வழங்கப்பட்டது.

ஊட்டி கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் மகேந்திரன், கால்நடை உதவி மருத்துவர்கள் அமுதா, சுதா, முதன்மை கால்நடை மேற்பார்வையாளர் சென்ன கிருஷ்ணன், கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் என, அனைவரும் பங்கேற்றனர். முகாம் ஏற்பாடுகளை, ஊட்டி கால்நடை பெரு மருத்துவமனை பிரதம மருத்துவர் மதிசேகர் செய்திருந்தார்.

## மக்காச்சோளம் விளைச்சல் அதிகம்: தமிழக அரசு கொள்முதல் செய்ய கோரிக்கை

க.பரமத்தி: க.பரமத்தி யூனியன், ராஜபுரம் மற்றும் சுற்றுப்புற பகுதியில், மக்காச்சோளம் அமோக விளைச்சலால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். க.பரமத்தி யூனியன் பகுதியில், மக்காச்சோளம் தொக்குப்பட்டி, ராஜபுரம், வாய்க்காலூர், சின்னம்மநாய்க்கனூர் உள்ளிட்ட பகுதியில், 500க்கும் மேற்பட்ட விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டுள்ளது. இவை, ஆறு மாத காலத்தில் அறுவடைக்கு தயாராவதற்கு முன்பே, வெளி மாவட்டங்களிலிருந்து நூற்றுக்கணக்கான அரவைமில் உரிமையாளர்கள் கால்நடை மற்றும் கோழி தீவனங்கள் தயாரிப்பதற்கு வாங்கி செல்கின்றனர். மேலும், குளுக்கோஸ் தயாரிக்க முக்கிய பொருளாக பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். முக்கியத்துவம் வாய்ந்த மக்காச்சோளத்திற்கு போதிய விலை நிர்ணயம் இல்லாததால் கிலோ, பத்து முதல் 14 ரூபாய் வரை மட்டுமே விலை போவதால், விவசாய உற்பத்தி செலவுக்கு கூட இல்லாமல் விவசாயிகள், தொடர்ந்து நஷ்டத்தை சந்திக்க வேண்டியுள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதவாது: மக்காச்சோளம் அமராவதி ஆற்றின் தண்ணீரை நம்பித்தான் சாகுபடி செய்யப்படுகிறது. இவை, ஆறு மாத கால பயிர் என்பதால் மூன்று மாதங்கள் மட்டுமே ஆற்று தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுத்த முடியும். மற்ற தர்ணத்தில் கிணற்றில் தண்ணீரை சேமித்து வைத்து தான் பயிரை காப்பாற்ற முடியும். அப்போது கூடுதல் செலவாகிறது. எனவே, மக்காச்சோளம் உற்பத்தி விவசாயிகளின் நலன் கருதி, அரசே நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினார்.

## பீன்ஸ் விலை அதிகரிப்பால் "பொரியல்' தட்டைக்கு "மவுசு'

பழநி:திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன் சத்திரம், பழநி சுற்றுப் பகுதியில் பொரியல் தட்டை பல ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. பார்ப்பதற்கு முருங்கை பீன்ஸ் போலவே இருக்கும். தற்போது மழைபெய்து முருங்கை பீன்ஸ் விலை ஒரு கிலோ ரூ.45 முதல் ரூ.50 வரை விலை போகிறது. இதன் காரணமாக கடந்த வாரம் வரை ஒரு கிலோ ரூ.20 முதல் ரூ.25 விற்ற பொரியல் தட்டைக்கு கிராக்கி ஏற்பட்டு ஒரு கிலோ ரூ.35 வரை விலைபோகிறது. இதனால் பொரியல் தட்டை பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கொத்தயம் விவசாயி சின்னத்தாய் கூறுகையில், ""2 ஏக்கரில் தட்டைப் பயிருடன் பொரியல் தட்டை பயிரிட் டுள்ளேன். மழைபெய்துள்ளதால் விளைச்சல் உள்ளது. தற்போது பொரியல் தட்டைக்கு விலை கூடுதலாக விலை கிடைக்கிறது,"என்றார்.

## பீன்ஸ் விலை அதிகரிப்பால் "பொரியல்' தட்டைக்கு "மவுசு'

பழநி:திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன் சத்திரம், பழநி சுற்றுப் பகுதியில் பொரியல் தட்டை பல ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. பார்ப்பதற்கு முருங்கை பீன்ஸ் போலவே இருக்கும். தற்போது மழைபெய்து முருங்கை பீன்ஸ் விலை ஒரு கிலோ ரூ.45 முதல் ரூ.50 வரை விலை போகிறது. இதன் காரணமாக கடந்த வாரம் வரை ஒரு கிலோ ரூ.20 முதல் ரூ.25 விற்ற பொரியல் தட்டைக்கு கிராக்கி ஏற்பட்டு ஒரு கிலோ ரூ.35 வரை விலைபோகிறது. இதனால் பொரியல் தட்டை பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கொத்தயம் விவசாயி சின்னத்தாய் கூறுகையில், ""2 ஏக்கரில் தட்டைப் பயிருடன் பொரியல் தட்டை பயிரிட் டுள்ளேன். மழைபெய்துள்ளதால் விளைச்சல் உள்ளது. தற்போது பொரியல் தட்டைக்கு விலை கூடுதலாக விலை கிடைக்கிறது,"என்றார்.

## மழைக்காலத்தில் மல்பெரி செடிகளை தாக்கும் நோய்கள்

திண்டுக்கல்:திண்டுக்கல்லில் மழைக்காலங்களில் மல்பெரி செடிகளை தாக்கும் நோய்களை கட்டுபடுத்த பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் ரமேஷ் ஆலோசனை வழங்கினார். அவர் கூறியதாவது: மழைக் காலங்களில் மல்பெரி செடிகளை இலைப்புள்ளி, சாம்பல் நோய், இலைத்துரு மற்றும் இலை கருகல் நோய் அதிக அளவில் தாக்குகின்றன. விவசாயிகள் இந்நோய்களை கட்டுபடுத்த வேண்டும். இலைப்புள்ளி நோய் தாக்குதல் உள்ள செடிகளின் இலையில் பழுப்பு நிறத்தில் புள்ளிகள் காணப்படும். பின்னர் புள்ளிகள் பெரிதாகி இலையில் ஓட்டை ஏற்படும். இதனை தடுக்கபெவிஸ்டினை 0.1 சதவிதம் இலைகளின் மீது தெளிக்க வேண்டும். சாம்பல் நோய் மழை மற்றும் குளிர் காலத்தில் தாக்கும். இந்நோய் தாக்கிய இலைகளின் மீது சாம்பல் நிற மாவு போன்ற துகள்கள் காணப்படும். இதனை தடுக்க 0.2 சதவிதம் காரத்தேன், இன்டோபில் பூஞ்சாணக் கொல்லியை தெளிக்க வேண்டும்.

இலைத்துரு நோய் பனிக்காலத்தில் அதிகம் தாக்கும். நோய் தாக்கிய பழுப்பு நிற, வட்டமான சிவப்பு நிற புள்ளிகள் இலையில் அடியிலும் மேல்பாகத்திலும் தென்படும், பாதித்த இலைகள் பழுத்து உதிர்ந்துவிடும். கவச் 0.2 சதவித கரைசல் மருந்து தெளித்து 4 நாட்கள் கழித்து இலைகளை பறிக்கவும். இலைகருகல் நோய் வெயில், மழைக்காலங்களில் ஏற்படும். இலைகளில் பழுப்பு நிறம் கொண்ட திட்டுகள் தோன்றி இலை உதிர்ந்து விடும். டைத்தேன் தெளிக்க வேண்டும். இதனை பின்பற்றுவதன் மூலம் மல்பெரி செடிகளை நோய் தாக்குதலிலிருந்து கட்டுப்படுத்தலாம், என்றார்.

**வேளாண் விஞ்ஞானிகள் விவசாயிகள் சந்திப்பு முகாம்**

தொப்பம்பட்டி:பழநி வேளாண்மை தொழில்நுட்ப அட்மா திட்டத்தின் கீழ் தொப்பம்பட்டி வாகரை மக்காசோளம் ஆராய்ச்சி நிலையத்தில் தமிழ்நாடு வேளாண் பல்கலை விஞ்ஞானிகள், விரிவாக்க அலுவலர்கள், விவசாயிகள் கூட்டு சந்திப்பு முகாம் நடந்தது. பழநி வேளாண் உதவி இயக்குனர் சுருளியப்பன் தலைமைவகித்தார். இதில் ஆராய்ச்சி மைய தலைவர் விஞ்ஞானி பேராசிரியர் சேதுராமன், மரபியல் துறை பேராசிரியர் வினோதினி ஆகியோர் நெய்பயிரில் குலைநோய், தென்னையில் சிவப்பு கூன்வண்டு, மக்காச்சோளத்தில் வாடல்நோய், அடிச்சாம்பல் நோய் பரவும்விதம், அவற்றை கட்டுப்படுத்தும் விதம் குறித்தும், புதிய ரகங்கள், கலப்பின முறைகள், அவற்றின் செயல்விளக்க பாத்திகள் போன்றவைகளை விவசாயி களுக்கு விளக்கமாக எடுத்துக்கூறினர்.

விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளிக்கப் பட்டது. அட்மா திட்ட மேலாளர் கோசல்நாத் நன்றி கூறினார். உதவி தொழிற்நுட்ப மேலாளர்கள் மணிகண்ட ராஜா, ஜெகநாதன் ஏற்பாடுகளை செய்தனர்.

**நிலவேம்பு கஷாயம் நோயாளிகள் ஆர்வம்**

கன்னிவாடி:கன்னிவாடி அரசு சமுதாய நலமையத்தில், காய்ச்சல் பாதிப்பிற்குள்ளான நோயாளிகள் பலர் நிலவேம்பு கஷாயம் பருக ஆர்வம் காட்டினர்.

ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பகுதியில், சமீபத்திய மழையால் பரவலாக காய்ச்சல் பாதிப்பு அதிகமாக உள்ளது. கன்னிவாடி மட்டுமின்றி கே.புதுக்கோட்டை, ஸ்ரீராமபுரம், வட்டப்பாறை ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், காய்ச்சல் பரவலால் வெளிநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வழக்கமான சிகிச்சை முறைகளுடன், இலவச நிலவேம்பு கஷாயம் மீதான மக்களின் ஆர்வமும் அதிகரித்து வருகிறது.

கன்னிவாடி அரசு சமுதாய நலமையத்தில், சித்த மருத்துவ பிரிவு மூலம் நிலவேம்பு விழிப்புணர்வு சிறப்பு முகாம் ஐந்து நாட்களாக நடந்தது. தினமும் 400க்கும் மேற்பட்டோர், இறுதிநாளில் 540 பேர் நிலவேம்பு கஷாயத்தை ஆர்வமுடன் பருகினர்.

**ஆயக்குடியில் நெல் நடவு பணி மும்முரம்**

பழநி:பழநி பகுதியில் மழைபெய்து அணைகள், குளங்கள் நிரம்பியுள்ளதால் கடந்த ஆண்டை காட்டிலும் மூன்று மடங்கு சம்பா நெல் சாகுபடி அதிகரித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பழநி சுற்றுப்புற பகுதிகளில் 5,750 எக்டர் பரப்பளவில் சம்பா நெல் சாகுபடி செய்கின்றனர். கடந்த சில ஆண்டுகளாக போதிய மழையில்லாததால் குறைந்த அளவே நெல் சாகுபடி பணிகள் நடந்தது.

இவ்வாண்டு கொடைக்கானல், பழநி பகுதியில் நல்ல மழை பெய்தது. விவசாய ஆதாரங்களான வரதமாநதி அணை மற்றும் பாலாறு-பொருந்தலாறு அணைகள் நிரம்பியுள்ளன. இதேபோல குளங்கள் நிரம்பி பாசன வாய்க்கால்களில் தண்ணீர் வரத்துள்ளது. இதன் காரணமாக சம்பா நெல் ரகங்களான கோ ஆர்-50, ஆடுதுரை-49 உள்ளிட்ட நெல் ரகங்களை சாகுபடிசெய்வதற்காக விவசாயிகள் வயலை உழுந்து தயார்செய்கின்றனர். பலஇடங்களில் இயந்திர நடவுமுறை, ஆட்கள் மூலமும் நாற்றுகள் நடவு செய்கின்றனர்.

வேளாண் உதவி இயக்குனர் சுருளியப்பன் கூறியதாவது: கடந்தாண்டு நவம்பர், டிசம்பரில் 1,100 எக்டேர் பரப்பளவில் சம்பா நெல் சாகுபடி நடந்தது. இவ்வாண்டு மழைபெய்து தண்ணீர் உள்ளதால் தற்போது 3,100 எக்டர்

பரப்பளவில் நெல்சாகுபடி பணிகள் நடக்கிறது. இந்த நாற்றுகள் 135 நாட்களில் பலன்தரும். 105 நாட்களில் பலன்தரும் கோ-51 ரக விதைகள் 8,700டன் இருப்பு உள்ளது. ரூ.10 மானியத்தில் விதைநெல்கள் வழங்கப்படும். விவசாயத்திற்கு மொத்தம் 760 மி.மீ., மழைதேவை. தற்போது வரை 730 மி.மீ., மழை பெய்துள்ளதால் இவ்வாண்டு அதிகமான மகசூல் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சிறப்பு முகாம் நடத்தி விவசாய தொழில் நுட்ப ஆலோசனை வழங்கி வருகிறோம்," என்றார்.

## விவசாய கல்லூரி மாணவர்கள் பயிற்சி

தேனி;மதுரை விவசாயக்கல்லூரி மாணவர்கள் காமாட்சிபுரம் சென்டெக்ட் விவசாய அறிவியல் மையத்தில் 10 நாள் தங்கியிருந்து தொண்டு நிறுவனம் சார்ந்த பயிற்சி பெற்று வருகின்றனர். இயக்குனர் பச்சைமால் விளக்கினார். பண்ணை ஆராய்ச்சி திட்டங்கள், முன்னிலை விளக்க செயல்திட்டங்கள், தொழிற்பயிற்சி முறைகள், விரிவாக்க செயல்பாடுகள் குறித்து மைய தலைவர் மாரிமுத்து விளக்கினார். மாணவர்கள் டி.பாலசுப்பிரமணியம், எம்.கதிர்வேல், நிஷாந்த், சேதுபதி, வினோத், முகமது அசாருதீன் ஆகியோர் குழந்தைகள் காப்பகம், மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு பள்ளி, மதுபோதை மாற்று சிகிச்சை மையம், குடும்ப ஆலோசனை மையம், உறைவிட ஆரம்ப பள்ளி, மாற்றுத்திறனாளிகளுக்கான தொழிற்பயிற்சி கூடம் ஆகியவற்றை பார்வையிட்டனர்.

## நெல்லில் இலை கருகல் நோய் விவசாயத்துறை ஆலோசனை

தேனி;பனி காரணமாக நெல்லில் ஏற்படும் இலை கருகல் நோயை தடுக்கும் வழிமுறைகள் குறித்து விவசாயத்துறை ஆலோசனை வழங்கி உள்ளது.

தேனி, கோட்டூர், சீலையம்பட்டி, வீரபாண்டி, உப்புக்கோட்டை, உப்பார்பட்டி பகுதிகளில் நெல் நடவுப்பணிகள் முடிந்துள்ளன. அடுத்த 45 முதல் 60 நாட்களுக்குள் பனிப்பொழிவு இருந்தால், இலை கருகல் நோய் ஏற்படும். தற்போது பனிப்பொழிவு உள்ளதால்ல, நெல் நாற்றுகளில் இலைக்கருகல்

நோய் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. இந்நோய் தாக்கிய இலைகளின் ஓரங்களில் இருந்து நடு இலைகள் வரை கருக ஆரம்பிக்கும். இந்த அறிகுறிகள் தென்பட்டால் "ஸ்ட்ரெப் டோமைசீன்' மருந்தை 60 கிராம் வீதம் ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும். மேலும் இலைச்சுருட்டுப்புழு, குருத்துப்பூச்சி தாக்கவும் வாய்ப்புகள் உள்ளன. லைச்சுருட்டுப்புழு தாக்குதலின் போது, இலைகள் நீளவாக்கில் சுருட்டப்பட்டு உட்புறத்தில் பச்சயம் சுருண்டப்படுவதால், இலைகள் வெண்மையாக இருக்கும். குருத்துப்பூச்சி தாக்குதலால் இலைகளின் தோகைகளில் ஓரங்கள் அரிக்கப்பட்டு, வெள்ளை நிறத்தில் பிசிறாக இருக்கும். இந்த அறிகுறிகள் தென்பட்டால் ஒரு லிட்டருக்கு "அசிப்பேட்' மருந்தை 3 கிராம் வீதம் தெளிக்கலாம். அல்லது பாலிபோ மிடான் மருந்தை ஏக்கருக்கு 120 மி.லி.,தெளித்து கட்டுப்படுத்தலாம் ,என தேனி விவசாயத்துறை தெரிவித்துள்ளது.

## காய்கறி விதைகள் விற்பனை

பெரியகுளம்;பெரியகுளம் தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நியைத்தில், தானியங்கி விதை வழங்கும் கருவி அமைக்கப்பட்டுள்ளது. இதில் 10 ரூபாய் செலுத்தி,தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலையால் வெளியிடப்பட்டுள்ள தக்காளி, கத்தரி, மிளகாய், வெண்டை, வெங்காயம், பாகல், புடலை, பீர்க்கன், பூசணி உட்பட காய்கறிகள் மற்றும் மலர் செடிகளின் விதை பாக்கெட்டுகளை விவசாயிகள் ஆர்வத்துடன் வாங்கி வருகின்றனர். வீட்டுத்தோட்டம், மாடித்தோட்டம் அமைப்பதற்கு அதிகளவில் விதை பாக்கெட்டுகள் விற்பனையாகிறது.

## தேர்வு திறன் பயிற்சி

காரைக்குடி:காரைக்குடி ராமனாதன் செட்டியார் நகராட்சி உயர்நிலை பள்ளி பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு, அரசு பொது தேர்வை எதிர்கொள்வது குறித்த பயிற்சி, முதன்மை கல்வி அலுவலர் செந்திவேல் முருகன் தலைமையில் அப்பள்ளியில் நடந்தது. தேவகோட்டை கல்வி மாவட்ட அலுவலர் பாலசுப்பிரமணியன் முன்னிலை வகித்தார். தலைமை ஆசிரியர் பீட்டர்ராஜா

வரவேற்றார். தேவராஜன், கஸ்தூரி ரங்கன், வடிவேல் பயிற்சி அளித்தனர். ஆசிரியை விஜயலட்சுமி நன்றி கூறினார். ஏற்பாடுகளை ஆசிரியைகள் கீதா சுந்தேரஸ்வரி செய்திருந்தார்.

**தண்ணீரில் மூழ்கிய சம்பா பயிர்: நாகையில் விவசாயிகள் சோகம்**

நாகப்பட்டினம்: கனமழையால், 1.50 லட்சம் ஏக்கரில் சம்பா பயிர்கள் நீரில் மூழ்கி உள்ளது. நாகை மாவட்டத்தில், கடந்த சில தினங்களாக இடைவிடாது கொட்டும் கனமழையால், தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியுள்ளது.நாகை மாவட்டத்தில் முறையாக துார்வாரப்படாத வடிகால் வாய்க்கால்கள், கடல் முகத்துவாரங்களில் ஆக்கிரமிப்பு போன்ற காரணங்களால், வெள்ள நீர் நாட்கணக்கில் தேங்கி நிற்கிறது. பெருக்கெடுக்கும் வெள்ளம், பல இடங்களில் இளம் சம்பா பயிர்களை அடித்து சென்றுள்ளது. நாகை மாவட்டத்தில், 2.80 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல இடங்களில் சம்பா பயிர் முற்றி, கதிர்கள் வெளிவரும் நிலையில், விளைநிலங்களில் தண்ணீர் தேங்கியதால், நெல் பயிர் தண்டு அழுகி, குருத்து புழு, இலை குருத்து புழு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 1.50 லட்சம் ஏக்கரில் சம்பா பயிர்கள் நீரில் மூழ்கி உள்ளது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## அத்தியாயம்-24. இரும்புச் சத்து அமோக சத்து



உடல் வளர்ச்சி அதிகமாக காணும் குழந்தை பருவத்திலும், விடலை பருவத்திலும், பெண்கள் கருவுரும் காலங்களிலும் ரத்த சோகை பரவலாக காணப்படும் ஒரு குறைபாடு. ரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை குறைந்தாலோ அல்லது ரத்தத்திற்கு சிவப்பு நிறத்தைத் தரக் கூடிய ஹீமோகுளோபின் அளவு குறைவாக இருந்தாலோ ரத்த சோகை ஏற்படும். ரத்த சோகையில் பல வகை உண்டு. அதில் குறிப்பாக புரோட்டீன், இரும்புச் சத்து வைட்டமின், B12,folic அமிலம் போன்ற சத்துக்கள் உடம்பில் குறைவதனால் ஏற்படக்கூடிய ரத்த சோகையை Nutritional Anemia என்று அழைக்கின்றோம்.

வளரும் பருவத்தில் உடல் வளர்ச்சிக்கு இரும்புச் சத்து அதிகம் தேவைப்படுகிறது. இன்றைய டீன் ஏஜ் குழந்தைகள் உணவின் முக்கியத்துவமும் உடலுக்கு தேவையான சத்துக்கள் என்னவென்று அறிந்து போதுமான அளவு சாப்பிடாமல் அளவையும் தரத்தையும் குறைத்து சாப்பிடுகிறார்கள். சத்தான உணவை முறையான வேளையில் உட்கொள்ளாமல் நொறுக்குத் தீனிகளை பெரும்பாலும் உட்கொள்கிறார்கள்.

மதிய உணவை பெரும்பாலும், பள்ளியிலோ, கல்லூரியிலோ கழிப்பதால் கேண்டீனில் பிஸ்கட், சிப்ஸ், சமோசா, கோக் ஆகியவற்றை விரும்பி சாப்பிடுகிறார்கள். காலை வேளையில் ஸ்டைலாக இரண்டு பிஸ்கட்டை டீயுடனோ, காபியுடனோ சாப்பிட்டுவிட்டு வெளியில் கிளம்புகிறார்கள். குழந்தைப் பருவத்திலிருந்தே அடிக்கடி ஏற்படும் தொற்று நோய்களும் ரத்தச் சோகைக்கும் ஒரு காரணம் இரும்புச் சத்து பற்றாக் குறையினால் ஏற்படும் அறிகுறிகளை நாம் முதலில் கண்காணிக்க வேண்டும். மூச்சு திணறல், நோய் எதிர்ப்புத் தன்மை குறைதல், களைப்பாக இருப்பது போல் காணப்படுதல், தலைசுற்றல், அஜீரணக் கோளாறுகள் போன்றவை ஏற்படதால் அது ரத்த சோகையின் அறிகுறிகளாகும். ரத்த சோகையை மருந்துகளில் மூலமாக குணப்படுத்த முடியும். இதைத் தவிர உணவு விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இரும்புச் சத்து அதிகமுள்ள உணவுப் பொருட்களை மட்டும் சேர்த்துக் கொள்வதால் ரத்த சோகையை குணப்படுத்த முடியாது.

போதுமான மாவுச்சத்து, மற்றும் புரதச் சத்துடன், காய்கறி பழவகைகளும் அவசியம் உட்கொள்ள வேண்டும். அத்துடன் ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு டம்ளர் பாலாவது குடிப்பது மிக அவசியம். உணவுடன் வைட்டமின் சி சத்து நிறைந்த பழங்களையும், பழச்சாறுகளையும் உட்கொள்ள வேண்டும். வைட்டமின் சி இரும்புச் சத்தை முழுமையாக உடலில் சேர்க்கிறது.

உனவுடன் டீ, காபி குடிக்கக் கூடாது. அப்படி குடித்தால் இரும்புச் சத்து உடலில் சேராமல் போய்விடும். பச்சைக் காய்கறிகள், கீரை வகைகள் குறிப்பாக கொத்துமல்லி, புதினா, அரைக்கீரை, முருங்கை கீரை, சுண்டைக்காய் ஆகியன இரும்புச் சத்து நிறைந்து காணப்படுகிறது. முட்டையில் உள்ள மஞ்சள் கரு முழு தானிய வகைகள் ஈரல் போன்ற இறைச்சி வகைகள் உடம்பிற்கு இரும்பு மற்றும் ஃபாலிக் சத்தை அளிக்கிறது.

நொறுக்குத் தீனிகள் என்ற பெயரில் பிஸ்கட், பஃப், ப்ரெட் என்று வாங்கி குழந்தைகளுக்குக் கொடுக்காமல் வேர்க்கடலை உருண்டை, வெல்லப்பாயசம், அவல், பொரி உருண்டை, உளுந்து லட்டு என்று நாம் வீட்டிலேயே சிற்றுண்டிகளை தயாரித்து பசிக்கும் நேரத்தில் உட்கொள்ளலாம்.

முளைகட்டிய பயறுவகைகள் வைட்டமின் சியை அதிகரித்து நல்ல புரதத்தை அளிக்கிறது. முளைகட்டிய பயறுவகைகளை லேசாக ஆவி பிடித்துதான் உண்ண வேண்டும். பச்சையாக சாப்பிடக் கூடாது.

ரத்தசோகை தாக்கியவர்கள் முதல் முதலில் வயிற்றில் பூச்சி இருக்கிறதா என்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும். பரிசோதித்த பிறகு அதற்கு டாக்டரிடம் சரியான ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு எடுத்துக் கொண்ட பிறகு தான் மருந்தும், உனவு முறைகளும் பலன் அளிக்கும்.

**தொடர்புக்கு - அருணா ஷ்யாம் : 9884172289**

## நெற்பயிரைத் தாக்கும் ஆனைக்கொம்பன்



தற்போதுள்ள பருவத்தில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிரை பரவலாக ஆனைக்கொம்பன் தாக்கி அதிக சேதத்தை ஏற்படுத்தி வருவதால் விவசாயிகள் தகுந்த மேலாண் முறையைப் பின்பற்ற வேண்டும். இதுகுறித்து வேளாண் அறிவியல் நிலைய பூச்சியியல் துறை திட்ட ஒருங்கிணைப்பாளர் சுமதி கூறியதாவது:

தற்போதுள்ள பருவத்தில் நெற்பயிரை ஆனைக்கொம்பன் தாக்கி சேதப்படுத்தி வருகிறது. இப்புழுக்கள் தண்டைத் துளைத்து உள்சென்று குருத்தைத் தாக்கும்போது உள்பகுதியிலிருந்து தோன்றும் இலை, மேற்கொண்டு வளராமல்

வெங்காய இலை போல குழலாக மாறிவிடும். இது வெள்ளிக் குருத்து அல்லது வெங்காய இலைச் சேதம் எனப்படும். இத்தூர்கள் பார்ப்பதற்கு யானைத் தந்தம் போன்று இருப்பதால் ஆனைக்கொம்பன் என்று பெயர். தாக்கப்பட்ட தூர்களிலிருந்து கதிர்கள் வெளிவராது.

இதிலிருந்து நெற்பயிரை காக்கும் மேலாண்மை முறை: அறுவடைக்குப் பின் எஞ்சி நிற்கும் தாள்கள், களைகளை அழித்துவிட வேண்டும். மண் பரிசோதனை பரிந்துரைப்படி உரம் இட வேண்டும். தொடர்ந்து ஆனைக் கொம்பன் ஈயின் தாக்குதலுக்கு உள்ளாகும் பகுதிகளில் மதுரை 3 நெல் ரகத்தைப் பயிரிடலாம். பிளேட்டிகேஸ்டர் ஒரைசே எனும் புழு ஒட்டுண்ணி இயற்கையிலேயே இப்பூச்சியைக் கட்டுப்படுத்துகிறது. இந்த ஒட்டுண்ணி கொண்ட தூர்களைச் சேகரித்து பத்து சதுர மீட்டருக்கு ஒன்று என்ற அளவில் வயலில் பரவலாக நடவு செய்யலாம்.

பொருளாதச்ó சேத நிலையை எட்டியவுடன் கீழ்கண்ட பூச்சிக்கொல்லிகளுள் ஏதேனும் ஒன்றை ஒரு ஹெக்டேருக்குத் தெளிக்க வேண்டும்.

கார்போசல்பான் 25 சதவீதம் 800-1000 மி.லி.

குளோரோபைரிபாஸ் 20 சதவீதம் 1,250 மி.லி.

பைப்ரினில் 5 சதவீதம் 1,000-1,500 மி.லி.

பைப்ரினில் 0.3 சதவீதம் 16-25 மி.லி.

தையமித்தக்சாம் 25 சதவீதம் 100 கிராம் என்ற அளவில் இட வேண்டும். இவ்வாறு பூச்சியியல் துறை, திட்ட ஒருங்கிணைப்பாளர் சுமதி கூறினார்.

**அதிக மகசூலுக்கான கொய்யா சாகுபடி தொழில்நுட்பம்**



கொய்யா சாகுபடியில் தகுந்த தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றி அதிக மகசூல் பெறலாம் என, தோட்டக்கலைத் துறை அறிவுறுத்தியுள்ளது. ஏழைகளின் ஆப்பிள்: நாட்டின் மொத்த பரப்பளவில் கொய்யா உற்பத்தியானது 2.5 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சுமார் 2.27 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இது ஆப்பிள் பழத்துக்கு நிகரான சத்துகளையும், சுவையையும் கொண்டிருப்பதால் "ஏழைகளின் ஆப்பிள்' எனப்படுகிறது. மண்வளம், தட்பவெப்பம்: வெப்ப, மித வெப்ப மண்டல பயிரான இது, கடல் மட்டத்திலிருந்து 1,500 மீட்டர் உயரமுள்ள பகுதிகளிலும் வளரும். ஆண்டின் மழையளவு ஆயிரம் மிமீ வரை உள்ள இடங்களில் மரத்தின் வளர்ச்சி நன்றாக இருக்கும். இம்மரம் தனது கடினத் தன்மையால் வண்டல் மண்ணிலிருந்து அனைத்து வகையான மண், காலநிலைகளில் சிறந்து வளர்கிறது. மேலும், நல்ல வடிகால் வசதி உடைய நிலங்களில் சாகுபடி செய்யலாம். இதற்கு மண்ணின் கார அமிலத்தன்மையானது 4.5 முதல் 7.5 சதம் என்ற அளவில் இருக்க வேண்டும். இளஞ்செடிகள் வறட்சி, குளிர்ச்சியைத் தாங்காது. ரகங்கள்: லக்னோ 49, அலகாபாத் சபேதா, அரிஜா, ஆப்பிள், பனாராசி, அர்கா, மிர்துளா, அர்கா அமுல்யா, சிட்டிடார், ரெட்பிளஸ், சபேத் ஜாம், கோகிர் சபேதா, லலித், ஸ்வேதா போன்ற ரகங்களைப் பயிரிடலாம். நிலம் தயார்படுத்துதல்: கொய்யா பயிரிட இருக்கும் நிலங்களை 2 முதல் 4 முறை உழுது 0.6 மீட்டர் ஆழம்,

அகலம் என்ற அளவில் குழி தோண்டி மேல் மண்ணுடன் 20 கிலோ தொழுஉரம், 500 கிராம் சூப்பர் பாஸ்பேட் கொண்டு நிரப்ப வேண்டும். கன்றுகளை குழி நடுவே நட்டு மண்ணால் அணைக்க வேண்டும். பருவமழை தொடங்கும்போது நட வேண்டும். அடர்த்தி நடவு: நிலத்தின் தன்மை, மண்வளம், நடவுமுறை பொறுத்து ஏக்கருக்கு 112 செடிவரை நடலாம். எனினும், இது பொதுவாக 3.6 மீட்டரிலிருந்து 5.4 மீட்டர் இடைவெளியில் நடப்படுகிறது. இதில் பழத்தின் எடை, அளவு குறைவாக இருந்தாலும் ஒரு மரத்தின் பழங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்.

நீர் மேலாண்மை: பொதுவாக, கொய்யா மரங்களுக்கு நீர்ப் பாசனம் தேவையில்லை. ஆனால், தொடக்க நிலையில் இளஞ்செடிகளுக்கு ஓராண்டுக்கு 8 முதல் 10 முறை நீர்ப்பாசனம் அவசியம். முழு வளர்ச்சி தாங்கிய மரங்களுக்கு மே, ஜூலையில் வாராந்திர இடைவெளியில் நீர்ப் பாய்ச்ச வேண்டும். சொட்டு நீர்ப் பாசனம் மூலம் 60 சதவீதம் தண்ணீர் சேமிப்பதுடன் பழத்தின் எடை, அளவு கணிசமாக அதிகரிக்கும். உரம், சத்து மேலாண்மை: 100 கிராம் தழைச்சத்து, 40 கிராம் மணிச்சத்து, 40 கிராம் பொட்டாஷ் ஆகிய உரங்களை நட்ட 6ஆம் ஆண்டில் கொடுக்க வேண்டும். தழைச்சத்து, பொட்டாஷ், சாம்பல் சத்தை இரு பாகங்களாக முறையே ஜனவரி, ஆகஸ்ட் மாதங்களில் அளிக்க வேண்டும்.

நுண்ணூட்ட சத்துகள்: பூக்கள் பூக்கும் முன்பு போரிக் அமிலம் (0.1), ஜிங்க் சல்பேட் போன்ற கலவையை இலை வழியாக தெளிப்பதன் மூலம் பழத்தின் அளவு, மகசூலை அதிகரிக்க முடியும். காப்பர் சல்பேட் (0.20.4) தெளிப்பதன் மூலம் தாவரங்களின் வளர்ச்சி, மகசூலை அதிகரிக்கலாம்.

பின்செய் நேர்த்தி: களைகள் பெரும்பாலும் பாதிப்பை ஏற்படுத்தி 30 முதல் 40 சதவீதம் வரை மகசூலைக் குறைக்கிறது. களைக்கொல்லியாக கிராமக்சோன் தெளிக்க வேண்டும். பழத்தோட்டத்தில் மண் வளத்தை மேம்படுத்த 2 முதல் 3 முறை நிலத்தை உழ வேண்டும். மேலும், ஆண்டுக்கு 2 முறை மூடாக்கு காகித விரிப்பு மூலம் மண்ணின் ஈரத்தன்மையைப் பாதுகாக்கலாம்.

ஊடுபயிர்கள்: பயறு வகைப் பயிர்களான பச்சை பயிர், உளுந்து, தக்காளி மற்றும் பீட்ரூட் ஊடுபயிர்களாக தொடக்கக் காலகட்டங்களில் பயிரிடுவதன்

மூலம் அதிக வருமானம் பெறலாம். சாம்பல் பூசணி, வெள்ளரி, அன்னாசி, பீன்ஸ், முட்டைக்கோஸ் போன்றவற்றை ஊடுபயிராகப் பயிரிடலாம்.

கவாத்து, சீரமைப்பு: கொய்யா மரங்களில் கவாத்து செய்வதன் மூலம் பழத்தின் தரம், மகசூலை அதிகரிக்க முடியும். காய்களைத் தாங்குவதற்கேற்ப கிளைகளின் வலுவான கட்டமைப்பை உருவாக்குகிறது. இதற்காக, தரைமட்டத்திலிருந்து வெளியே வரும் தளிர்களை 30 செமீ வரை துண்டிக்க வேண்டும். மேலும், 4 தூக்குக் கிளைகளை வளரவிட்டு நடுப்பகுதியைத் திறக்க வேண்டும்.

பயிர் ஒழுங்குபடுத்தல்: பருவகால பயிர் ஒப்பிடுகையில் குளிர்காலத்தில் பயிர்கள் தரம் உயர்ந்தும், அதிக விலைக்கும் போகும். எனவே, விவசாயிகள் பெரும்பாலும் பூக்களைக் கிள்ளிவிடுவதன் மூலம் பருவகாலப் பயிர்களை தவிர்க்கின்றனர். இதற்காக, மாலிக் அமிலம், நாப்தாலிக் அமிலம் மற்றும் 2.4 டி (30 பிபிஎம்) ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். மேலும், வேர்களைக் கவாத்து செய்வதன் மூலமும், வேர்களை வெளியே எடுத்து விடுவதன் மூலமும், சில நேரம் கிளைகளை வளைத்துவிடுவதன் மூலமும், தேவையற்ற இலைகளை வெட்டிவிடுவதன் மூலமும் பூக்களை அரும்ப செய்யலாம்.

பயிர்ப் பாதுகாப்பு: பழ ஈக்களைக் கட்டுப்படுத்த மாலத்தியான் ஒரு லிட்டருக்கு பாஸ்போம்டான் 0.5 மி.லி. மருந்தை நீரில் கலந்து தெளிக்க வேண்டும். மாவுப் பூச்சியை அழிக்க மாலத்தியான் ஒரு லிட்டருக்கு 2 மி.லி மரத்தைச் சுற்றி பாலிதீன் பையைக் கட்டுவதன் மூலம் தடுக்கலாம். நோயைப் பொறுத்தவரை வேரழுகல், இலைப்புள்ளி நோய் அதிக சேதம் ஏற்படுத்தும். இதைக் கட்டுப்படுத்த குயினால் சல்பேட்டை ஊசி மூலம் செலுத்தியும், காப்பர் ஆக்சிகுளோரைடையும் ஒரு லிட்டருக்கு 2 மி.லி. பயன்படுத்தலாம்.

அறுவடை: பதியன், காற்றடுக்குதல், ஒட்டுக் கட்டுதல் மூலம் நடப்பட்ட மரங்கள் 2 முதல் 3 ஆண்டில் காய்க்கத் தொடங்கும். பொதுவாக, காய்களை பழுக்கும் நிலையில் மரத்தில் தக்கவைக்கக் கூடாது. அடர்பச்சை நிறத்திலிருந்து வெளிறிய பச்சை அல்லது மஞ்சள் கலந்த பச்சை நிறமாக மாறும்போதே அறுவடை செய்ய வேண்டும். ஒட்டுக் கட்டிய ஒரு மரத்திலிருந்து 350 கிலோவரை மகசூல் கிடைக்கும். 5 முதல் 7 ஆண்டுவரை தொடர்ந்து மகசூல் கிடைக்கும். நாற்றுகள் மூலம் சாகுபடி செய்யப்படும் ஒரு மரத்திலிருந்து 90

கிலோ பழங்கள் கிடைக்கும்.

## வேளாண்மை தொழில்நுட்ப பயிற்சி முகாம்

சிங்கம்புணரி வட்டார விவசாயிகளுக்கான வேளாண்மை தொழில் நுட்ப பயிற்சி முகாம் புதன்கிழமை நடைபெற்றது. முகாமுக்கு வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) அழகப்பன் தலைமை வகித்தார். அட்கோ திட்ட தொழில் நுட்ப மேலாளர் பிரபு வரவேற்றார். முகாமில் பண்ணை பள்ளி தொடங்குதல், வேளான் விஞ்ஞானிகள் குறித்து ஆய்வு பற்றி விவாதிக்கப்பட்டது. இதில் வேளாண்மை உதவி இயக்குநர் கார்த்திகேயன், விவசாயக் குழு தலைவர் ஆண்டவர், உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் கோபாலகிருஷ்ணன், பிரபு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை மூலம் விவசாயிகளுக்கு ரூ.263.72 கோடி பயிர்க் கடன்கள் வழங்கல்

சிவகங்கை மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை மூலம் 76,644 விவசாயிகளுக்கு கடந்த 4 ஆண்டுகளில் ரூ.263.72 கோடிக்கு வட்டியில்லா பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டிருப்பதாக மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் செல்வகுமரன் தெரிவித்தார். சிவகங்கை மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை மூலம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கடனாக சிவகங்கை அருகேயுள்ள பாவாகுடி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி கதிரேசன் ரூ.1 லட்சம் பெற்று ஆழ்துளை கிணறு அமைத்துள்ளதை புதன்கிழமை அதிகாரிகள் பார்வையிட்டனர். அப்போது இணைப் பதிவாளர் செல்வகுமரன் கூறியதாவது: தமிழக அரசால் 100 எம்.டி. கொள்ளளவு கொண்ட தானியச் சேமிப்புக் கிடங்கில் விவசாயிகள் தங்களுடைய விளை பொருள்களை இருப்பில் வைத்து அதிக விலை கிடைக்கும் போது விற்பனை செய்யும் வகையில் 75 சதவீதம் கடன் வழங்கப்படுகிறது. இதே போல் கடந்த ஆண்டு இருப்பு வைத்து விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டுள்ளது. 2014- 2015 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையின் படி ரூ.2.67 லட்சம் நிகர லாபம் விவசாயிகளுக்கு கிடைத்துள்ளது. இத்துறையின் சார்பில் பொது சேவை மையம் மூலம் 2015 ஏப்ரல் முதல் நவம்பர் வரை 2,125 பேருக்கு வருவாய்த்

துறை சான்றும், 15 பேருக்கு சமூக நலத் துறை சான்றும் வழங்கப்பட்டது. 1575 பேருக்கு நில உடைமை நகல்கள் ஆன் லைன் மூலம் வழங்கப்பட்டுள்ளன. கூட்டுறவுத் துறையின் மூலம் 76,644 விவசாயிகளுக்கு ரூ.263.72 கோடி வட்டியில்லா பயிர்க் கடன்கள் கடந்த 4 ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் விவசாயம் சார்ந்த பால் மாடு, ஆடு வளர்ப்பு போன்றவைகளுக்கு 5,769 பேர்களுக்கு ரூ.20.62 கோடி அளவுக்கு மத்திய காலக் கடன்களும் வழங்கப்பட்டுள்ளன என்றார். அப்போது கூட்டுறவு சார்பதிவாளர் மற்றும் மாவட்ட கூட்டுறவு வங்கிகளின் மேலாண்மை இயக்குநர் வினோபா, மல்லல் கூட்டுறவு கடன் சங்கத் தலைவர் ஜெயராஜா, செயலர் ராமச்சந்திரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### ரூ. 5 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ. 5 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. இந்த விற்பனை மையத்தில் நடைபெற்ற பருத்தி ஏலத்திற்கு 373 மூட்டைகள் வந்திருந்தன. இதில், ஆர்.சி.எச். ரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 4000 முதல் ரூ. 4,600 வரையிலும், டி.சி.எச். ரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 4,600 முதல் ரூ. 5,280 வரையிலும், மட்டரகப்பருத்தி ரூ. 1,600 முதல் ரூ. 2,000 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 5 லட்சத்து 6 ஆயிரத்துக்கு பருத்தி ஏல வர்த்தகம் நடைபெற்றது. ஏலத்தில், கோபி, நம்பியூர், அன்னூர், திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி, புளியம்பட்டி, அன்னூர் ஆகிய பகுதிகளிலிருந்து 110 பருத்தி விவசாயிகளும், கோவை, ஈரோடு பகுதியிலிருந்து 8 வியாபாரிகளும் பங்கேற்றனர்.

### ஓமலூர் பகுதியில் மழையால் பூக்கள் நடவுப்பணி பாதிப்பு

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டாரப் பகுதிகளில் மழையின் காரணமாக பூக்கள் நடவு செய்யும் பணி பாதிக்கப்பட்டுள்ளது. ஓமலூர் அருகேயுள்ள, காடையாம்பட்டி ஒன்றியத்தில் உள்ள பூசாரிப்பட்டி, தாராபுரம், கஞ்சநாயக்கன்பட்டி, தீவட்டிப்பட்டி, குண்டுக்கல், காருவள்ளி உள்பட 50-க்கும்

மேற்பட்ட கிராமங்களில் ஆண்டுதோறும் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் பூக்கள் பயிரிடப்படும். இங்கு அதிக அளவில் சாமந்தி விளைவிக்கப்படுகிறது.

மேலும், குண்டு மல்லி, மல்லிகை, ஜாதி மல்லி, ஊசி மல்லி, பட்ரோஸ், கோழிக் கொண்டை, சம்மங்கி, மரிக்கொளுந்து, துளசி உள்பட பல்வகையான பூக்களும் இங்கே பயிரிடப்பட்டு வருகின்றன. நவம்பர் 2-வாரத்தில் இருந்து பூக்களை நடவு செய்யும் பணி தொடங்கும். ஆனால், நிகழாண்டில் அதிக மழைப் பொழிவு காரணமாக நடவுப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மழைக்கு முன்னதாகவே பல்வேறு கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் கிணற்று நீரை கொண்டு பல்வகையான பூக்களை விவசாயிகள் நடவு செய்தனர். மேலும், சில இடங்களில் பூக்கள் பூக்கும் தருவாயில் உள்ளன. இந்த நிலையில் தற்போது பெய்த பலத்த மழையால் நடவு செய்த நாற்றுகள் அனைத்தும் அழுகி விட்டன. பூக்களும், செடிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், தோட்டக்கலை துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட இடங்களை ஆய்வு செய்து உரிய இழப்பீடு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### செந்துறையில் 29 மி.மீ மழை

அரியலூர் மாவட்டம், செந்துறையில் புதன்கிழமை 29 மி.மீ மழை பெய்தது.

அரியலூர் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. புதன்கிழமையும் பரவலாக மழை பெய்தது. இதனால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பட்டது. தொடர் மழை காரணமாக ஜயங்கொண்டம் அருகேயுள்ள பொன்னேரி ஏரி நிரம்பும் தருவாயில் உள்ளது. இதன் உபரி நீரை வெளியேற்ற அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

பெரும்பாலான ஏரி, குளங்கள் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். மாவட்டத்தில் அதிகபட்சமாக செந்துறையில் 29 மி.மீ மழை பெய்தது. திருமானூரில் 16 மி.மீ, அரியலூரில் 15 மி.மீ, ஜயங்கொண்டத்தில் 5 மி.மீ மழை பதிவாகியது.

## விவசாயிகளுக்கு கால்நடை பண்ணையம் பயிற்சி: வரும் 7ஆம் தேதி துவக்கம்

விவசாயிகளுக்கு லாபகரமான கால்நடை பண்ணையம் பயிற்சி வரும் 7ஆம் தேதி முதல் அளிக்கப்பட உள்ளதாக கரூர் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் ந. அகிலா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கரூர் மாவட்டம் பண்டுதகாரன்புதூரில் உள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஐஓபி வங்கியின் ஊரக தொழில்முனைவோர் பயிற்சி மையம் சார்பில் விவசாயிகளுக்கு லாகரமான கால்நடை பண்ணையம் பயிற்சி வரும் 7-ம்தேதி முதல் 12-ம்தேதி வரை நடைபெறுகிறது.

இப்பயிற்சியில் அறிவியல் ரீதியில் கறவை மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி, பன்றி வளர்ப்பு பயிற்சிகளும், பராமரிப்பு முறைகளான இனம் தேர்வு செய்தல், பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, கால்நடை மற்றும் கோழிகளை தாக்கும் நோய்கள் மற்றும் அதனை தடுக்கும் முறைகள், மூலிகை சிகிச்சை முறைகள், விற்பனை உத்திகள், வங்கிக்கடன் உதவி, பண்ணைக்கான காப்பீடு, பண்ணைப்பொருளாதாரம், பசுந்தீவன உற்பத்தி, பதப்புடுத்துதல், கலப்பு தீவனம் தயாரித்தல், அசோலா வளர்ப்பு, தூய்மையான பால் உற்பத்தி, பால் பொருட்கள் தயாரிப்பு, மண்புழு உரம் தயாரித்தல், சாண எரிவாயு உற்பத்தி செய்தல் போன்ற தலைப்புகளில் பயிற்சி நடைபெறும்.

பயிற்சியில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் 04324-294335 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு முன்பதிவு செய்துகொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## செயற்கை வேளாண்மையே நோய்களுக்கு காரணம்

பல்வேறு நோய்களுக்குச் செயற்கை வேளாண்மையே காரணம் என்றார் ஸ்வீடன் நாட்டின் பெராஸ் பன்னாட்டு நிறுவன தலைமைச் செயல் அலுவலர் ஜோஸ்டீயின் ஹோர்ட்வீக். தஞ்சாவூர் பூண்டி ஸ்ரீ புஷ்பம் கல்லூரியில் தாவரவியல், நுண்ணுயிரியல் துறை சார்பில் அண்மையில் நடைபெற்ற

இயற்கை வேளாண்மைப் பற்றிய பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் அவர் பேசியது:

நம் மண்ணில் நன்மை தரும் உயிரிகளான ஆக்டினோபாக்டீரியா, வேர் பூஞ்சாணம் உள்ளிட்டவை உள்ளன. இவை அந்தந்த மண்ணுக்குத் தேவையான உரமாக இருக்கிறன. குறிப்பாக, வளிமண்டலத்தில் நைட்ரஜனை மண்ணுக்குள் ஈர்த்து தாவரத்துக்குக் கொடுக்க இந்த நன்மைத் தரும் உயிரிகள் பயனுள்ளதாக இருக்கின்றன. ரசாயன உரம் தெளிப்பதால், பயிரில் உள்ள குறிப்பிட்ட நோய் கட்டுப்படுத்தப்பட்டாலும், மண்ணில் உள்ள நன்மை தரும் உயிரிகளும் அழிகின்றன. இதனால் மண்ணில் உள்ள அமிலத்தன்மை மாறி காரத் தன்மையாக மாறிவிடுகிறது. மேலும் புற்றுநோய், நீரிழிவு நோய், உடல் பருமன், இருதய நோய் போன்றவற்றுக்குச் செயற்கை வேளாண்மையே முக்கியக் காரணமாக இருக்கிறது. எனவே, நன்மை தரும் உயிரிகளைப் பாதுகாக்க வேண்டும். இதன் மூலம் மண் வளம் கெட்டுப் போகாது. இயற்கை வேளாண்மையைப் போற்றி மண்ணுக்கு மீண்டும் உயிரூட்ட வேண்டும் என்றார் ஜோஸ்டீயின் ஹேர்ட்வீக். கல்லூரி முதல்வர் எஸ். உதயகுமார் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் கி. துளசிஅய்யா வாண்டையார், ஐ.எப்.டி.ஆர். நிறுவன சிறப்பு அலுவலர் எஸ். சேஷாத்திரி, கல்லூரி தாவரவியல், நுண்ணுயிரியல் துறைத் தலைவர் அ. பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மழையால் 65 ஹெக்டேர் பயிர்கள் அழுகி சேதம்: 300 ஹெக்டேரில் பயிர்கள் மூழ்கின

தஞ்சாவூர் மாவட்டத்தில் பெய்து வரும் மழையால் புதன்கிழமை வரை மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புப்படி 65 ஹெக்டேரில் நெற்பயிர்கள் அழுகி சேதமாகியிருப்பது தெரிய வந்துள்ளது. மாவட்டத்தில் சில நாள்களாகத் தொடர்ந்து பரவலாகவும், பலத்த மழையும் பெய்கிறது. இதனால் பல இடங்களில் சம்பா, தாளடி பருவ நெல் பயிரிடப்பட்ட வயல்கள் மூழ்கின.

ஒரத்தநாடு வட்டாரத்தில் 98 ஹெக்டேர், கும்பகோணம் வட்டாரத்தில் 46, திருப்பனந்தாள் வட்டாரத்தில் 43.8, பாபநாசம் வட்டாரத்தில் 34.4,

திருவையாறு வட்டாரத்தில் 29, பூதலூர், அம்மாபேட்டை வட்டாரங்களில் தலா 20, திருவிடைமருதூர் வட்டாரத்தில் 7, பட்டுக்கோட்டை வட்டாரத்தில் 1 என மாவட்டத்தில் இதுவரை மொத்தம் கிட்டத்தட்ட 300 ஹெக்டேரில் நெற்பயிர்கள் மூழ்கியுள்ளன. இதில், பாதிக்கப்பட்ட பயிர்கள் குறித்து வேளாண் துறையினர் உள்ளிட்டோர் கணக்கெடுத்து வருகின்றனர். மாவட்டத்தில் புதன்கிழமை வரை எடுக்கப்பட்ட கணக்கெடுப்புப்படி திருவையாறு வட்டாரத்தில் 30 ஹெக்டேர், ஒரத்தநாடு வட்டாரத்தில் 12, திருவிடைமருதூர் வட்டாரத்தில் 13.2, பட்டுக்கோட்டை வட்டாரத்தில் 9.4 என மொத்தம் ஏறத்தாழ 65 ஹெக்டேரில் பயிர்கள் அழுகி சேதமடைந்திருப்பது தெரியவந்துள்ளது. தொடர்ந்து பயிர்ப் பாதிப்பு நிலவரம் தொடர்பாக கணக்கெடுக்கின்றனர். எனவே, பாதிப்பு அளவு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இதனிடையே, மாவட்டத்தில் பல இடங்களில் புதன்கிழமை பகலில் மழை இல்லாததால் வயலில் தேங்கிய தண்ணீர் வடியத் தொடங்கியது.

108 வீடுகள் சேதம்: மாவட்டத்தில் 3 நாள்களாகப் பெய்து வரும் மழையால் 9 வீடுகள் முழுமையாகவும், 99 வீடுகள் பகுதியாகவும் என மொத்தம் 108 வீடுகள் சேதமடைந்தன. மாவட்டத்தில் இதுவரை 55 வீடுகள் முழுமையாகவும், 722 வீடுகள் பகுதியாகவும் என மொத்தம் 777 வீடுகள் சேதமடைந்தன.

217 கால்நடைகள் இறப்பு: மாவட்டத்தில் மழையால் இதுவரை 60 பசுக்கள், தலா இரு காளை, எருமை மாடுகள், 28 கன்றுக்குட்டிகள், 122 வெள்ளாடுகள், 3 செம்மறி ஆடுகள் என மொத்தம் 217 கால்நடைகள் இறந்தன.

நெய்வாசல் தென்பாதி 53.2 மி.மீ. மழை: மாவட்டத்தில் புதன்கிழமை காலை 8.30 மணியுடன் முடிந்த 24 மணிநேரத்தில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்):

நெய்வாசல் தென்பாதி -53.2, மதுக்கூர் -51.8, பேராவூரணி -43, குருங்குளம் -37, பட்டுக்கோட்டை -32, அதிராம்பட்டினம் -28.7, ஈச்சன்விடுதி -26, ஒரத்தநாடு -25.8, அய்யம்பேட்டை, வெட்டிக்காடு தலா -20, திருக்காட்டுப்பள்ளி- 17.8, பாபநாசம் -16.2, அணைக்கரை -15.2, மஞ்சலாற்றுத்

தலைப்பு -14.6, திருவிடைமருதூர் -14, பூதலூர் -10.8, திருவையாறு -10, வல்லம் -9.5, கும்பகோணம் -8.6, தஞ்சாவூர் -7.1, கல்லணை -5.3.

**மழையால் பாதிக்கப்பட்ட பருத்தி வயல்களில் வேளாண் அலுவலர்கள் ஆய்வு**

பெரம்பலூர் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்டுள்ள பருத்தி வயல்களை வேளாண் அலுவலர்கள் புதன்கிழமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின்போது பருத்தி பயிரில் ஏற்பட்டுள்ள வேரழுகல் மற்றும் இலைப்புள்ளி நோய் தாக்குதலை பார்வையிட்ட பெரம்பலூர் வேளாண்மை உதவி இயக்குநர் அ. கீதா கூறியது: வேரழுகல் நோய் ரைசோக்டோனியா சோலானி, மேக்ரோபோமினா பேசியோலினா போன்ற மண்வாழ் பூசணங்களால் ஏற்படுகிறது. இந்நோய் தாக்கிய வளர்ந்த செடிகள் வாடிய நிலையில் காணப்படும். பாதிக்கப்பட்ட செடிகளைப் பிடுங்கினால் மண்ணைவிட்டு எளிதாக வெளியே வந்துவிடும். செடிகளில் வேரின் பட்டைகள் சிதைந்து அழுகியதுபோல காணப்படும். இந்நோயைக் கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட செடிகளைப் பிடுங்கி அழிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதி மற்றும் அதைச் சுற்றியுள்ள செடிகளின் வேர்ப் பகுதி நன்கு நனையும்படி ஒரு லிட்டர் நீருக்கு கார்பென்டசிம் 2 கிராம் அல்லது காப்பர் ஆக்சி குளோரைடு 3 கிராம் அல்லது டெபுகோனசோல் 10 டிரைபிளாக்சிட்ரோபின் 5 கிராம் என்ற அளவில், ஏதாவது ஒன்றை கலந்து வேர்ப் பகுதியை சுற்றி ஊற்ற வேண்டும். பின்வரும் காலங்களில் இதே நிலத்தில் பருத்தி பயிரை மறுபடியும் சாகுபடி செய்வதை தவிர்த்து தானியப் பயிர்களான மக்காச்சோளம், சோளம், கேழ்வரகு ஆகிய பயிர்களை சுழற்சி முறையில் பயிரிட வேண்டும். பருத்தியை தாக்கும் மற்றொரு நோய் இலைப்புள்ளி நோயாகும். இந்நோய் ஆல்டர்நேரியா மேக்ரோபோரா என்ற பூசணத்தால் ஏற்படுகிறது. இப்பூசணம் உகந்த சூழ்நிலையில் 50% வரை விளைச்சல் இழப்பை ஏற்படுத்தக் கூடியது. பருத்தி பயிரின் வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலை இல்லாத போது இந்நோய் தோன்றுகிறது. இலைகளில் வட்ட வடிவமான வளையங்களைக் கொண்ட பல புள்ளிகள் தோன்றுவது, இந்நோயின் ஆரம்ப அறிகுறியாகும். நாளடைவில் பல புள்ளிகள் ஒன்றுசேர்ந்து இலைப்புள்ளியின் பரப்பளவு அதிகரித்து, இலைகள் பழுப்பு நிறமாக மாறி

இலை காய்ந்துவிடும். காய்ந்த இலைகளின்றி வெறும் கிளைகள் மட்டுமே இருக்கும். இந்நோய் தாக்கப்பட்ட காய்கள் சரியாக வெடிக்காததுடன் பஞ்சின் தரமும் குறையும். இந்நோயைக் கட்டுப்படுத்த விளைநிலங்களில் உள்ள பயிர் கழிவுகளைச் சேகரித்து அழிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட வயல்களில் ஓர் ஏக்கருக்கு டெபுகோனசோல் 200 மி.லி, புரோபிகோனசோல் 200 மி.லி, ஹெக்சாகோனசோல் 200 மி.லி, குளோரோதலோனில் 400 கிராம், காப்பர் ஆக்சி குளோரைடு 500 கிராம், டெபுகோனசோல் ட்ரைபினாக்சிட்ரோபின் 100 கிராம், மான்கோசப் 500 கிராம் என்ற அளவில் பூசணக் கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை தெளித்து கட்டுப்படுத்தலாம் என்றார் அவர்.

ஆய்வின்போது, வேளாண்மை அலுவலர் க. ரமேஷ், பருத்தி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் பாரதிபாஸ்கர், கல்பனா, பெரம்பலூர் வட்டார உதவி வேளாண்மை அலுவலர்கள் இளங்கோவன், வீரசிங்கம் ஆகியோர் உடனிருந்தனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 93 அடியை எட்டியது



மேட்டூர்

மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்றிரவு 93 அடியை எட்டியது. மேட்டூர் அணை, மேட்டூர் அணை நீர்பிடிப்பு பகுதிகளிலும், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும் மழை தீவிரம் அடைந்ததன் காரணமாக மேட்டூர் அணைக்கு கடந்த 3 நாட்களாக நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. கடந்த 4 நாட்களுக்கு முன்பு அணைக்கு வினாடிக்கு 4 ஆயிரம் கனஅடி வீதம் வந்து கொண்டிருந்த நீர்வரத்து நேற்று வினாடிக்கு 7 ஆயிரத்து 991 கனஅடியாக உயர்ந்துள்ளது. இந்த மழையின் காரணமாக கால்வாய் பாசனத்துக்கு வினாடிக்கு 500 கனஅடி வீதம் திறந்து விடப்பட்ட தண்ணீர் தற்போது வினாடிக்கு 200 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் டெல்டா பாசனத்துக்கு தொடர்ந்து வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. 93 அடியை எட்டியது

அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வரும் நிலையில், அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளதால் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்துவருகிறது. நேற்று இரவில் அணை நீர்மட்டம் 93 அடியை எட்டியது.

இந்த நீர்வரத்து மேலும் அதிகரிக்கும் பட்சத்தில் இன்னும் ஒரு வாரத்தில் மேட்டூர் அணை 100 அடியை எட்டி விடும் என்று பொதுப்பணித்துறையினர் நம்பிக்கை தெரிவித்தனர். ஒவ்வொரு ஆண்டும் டெல்டா பாசன பகுதிகளில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக தண்ணீர் கேட்டு விவசாயிகள் போராட்டம் நடத்தும் நிலை இந்த ஆண்டு மாறி உள்ளது. கடந்த ஒரு மாத காலமாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் டெல்டா பாசன பகுதி உள்பட பல்வேறு பகுதிகளிலும் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. பல இடங்களில் ஏரி, குளங்கள் மற்றும் சிறிய அணைகள் நிரம்பி உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் நில வேம்பு கசாயம் வழங்க நடவடிக்கை கலெக்டர் தகவல்



சிவகங்கை, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் நிலவேம்பு கசாயம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளார்.


<u>நிலவேம்பு கசாயம்</u>

சிவகங்கை மாவட்ட கலெக்டர் மலர்விழி விடுத்துள்ள ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:– மழைக் காலங்களில் ஏற்படும் காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களை கட்டுப்படுத்த அரசு மருத்துவமனைகள், தாலுகா மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சிறப்பு மருத்துவ முகாம்களில் சித்த மருத்துவ பிரிவின் மூலம் நிலவேம்பு கசாயம் வழங்க முதல்–அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 39 அரசு மருத்துவமனைகளில் செயல்படும் சித்த மருத்துவமனைகளின் மூலம் பொதுமக்களுக்கு நிலவேம்பு கசாயம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த 9 வகையான மூலிகைகள் கலந்த நிலவேம்பு கசாயத்தால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். காய்ச்சல் மற்றும் தொற்று நோய்கள் வராமல் இதனால் தடுக்க முடியும். சிவகங்கை மாவட்டத்தில் கடந்த 5 நாட்களில் மட்டும் 59 ஆயிரத்து 652 ஆண்கள், 63 ஆயிரத்து 590 பெண்கள் மற்றும் 30 ஆயிரத்து 506 குழந்தைகள் சேர்த்து ஒரு லட்சத்து 53 ஆயிரத்து 748 பேருக்கு நில வேம்பு கசாயம் வழங்கப்பட்டுள்ளது.

<u>சித்தா பிரிவு</u>

மேலும் நிலவேம்பு கசாயம் தேவைப்படுபவர்கள் அந்தந்த பகுதியில் உள்ள அரசு மருத்துவமனைகளில் செயல்படும் சித்தா பிரிவுகளில் அதனை பெற்றுக் கொள்ளலாம். மேலும் மாவட்ட சித்த மருத்துவ மருத்துவ அலுவலர் அழகப்பனை 04575–245044 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## காவிரி டெல்டாவில் ஆண்டுக்கு 942 மி. மீட்டர் மழை பெய்ய வேண்டும்: நாகை, திருவாரூர் மாவட்டங்களில் சராசரிக்கும் அதிகமான மழை தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 941 மி.மீட்டர் பதிவானது



தஞ்சாவூர்

காவிரி டெல்டா மாவட்டங்களில் ஆண்டுக்கு 942 மி.மீட்டர் மழை பெய்ய வேண்டும். இதில் நாகை, திருவாரூர் மாவட்டங்களில் சராசரிக்கும் அதிகமான மழை பெய்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 941 மி.மீட்டர் மழை பதிவாகி உள்ளது. காவிரி டெல்டா மாவட்டங்கள்

காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் பெரும்பாலும் மழைநீரை நம்பியே சாகுபடி பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த பகுதிகளில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெற்று வருகிறது. காவிரி டெல்டா பகுதியில் மட்டும் ஆண்டுக்கு 12 லட்சம் ஏக்கரில் சாகுபடி பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் தென்மேற்கு பருவமழை மூலம் கர்நாடகாவில் இருந்து மேட்டூருக்கு வரும் நீரைக்கொண்டு குறுவை சாகுபடி பணிகள் தொடங்கும். அதன்பின்னர் சம்பா, தாளடி சாகுபடி பணிகள் தொடங்கிய நிலையில் வடகிழக்குப்பருவமழை இதற்கு ஏற்ற வகையில் அமையும். அதன்படி தற்போது தமிழகத்தில் வடகிழக்குப்பருவமழை பெய்து வருகிறது. வடகிழக்கு பருவமழை

இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை அக்டோபர் மாதம் 28-ந்தேதி தொடங்கியது. அன்று முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இடையில் 3 அல்லது 4 நாட்கள் மழை இன்றி காணப்பட்டது. தற்போது கடந்த 3 நாட்களுக்கும் மேலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக காவிரி டெல்டா

மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டத்திலும் பரவலாக மழை பெய்து வருகிறது. காவிரி டெல்டா பகுதியில் ஆண்டுக்கு சராசரியாக 942 மி.மீட்டர் மழை பெய்ய வேண்டும். இந்த மழை அளவு ஜனவரி மாதம்1-ந்தேதி முதல் டிசம்பர் மாதம் 31-ந்தேதி வரை கணக்கிடப்படும் அளவு ஆகும். இது கோடைமழை, தென்மேற்கு பருவமழை, வடகிழக்குப்பருவமழை ஆகிய காலக்கட்டங்களில் பெய்யும் மழை அளவைக்கொண்டு கணக்கிடப்படும்.

தஞ்சை மாவட்டம் : அதன்படி இந்த ஆண்டு காவிரி டெல்டா மாவட்டங்களில் சராசரிக்கும் அதிகமான மழை பெய்து வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் இந்த வடகிழக்குப்பருவமழை காலக்கட்டத்தில் மட்டும் அதாவது அக்டோபர், நவம்பர் மாதத்தில் மட்டும் 480 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு இதுவரை 941 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் இன்னும் சராசரி அளவை எட்டுவதற்கு 1 மி.மீட்டர் மழை தான் பெய்ய வேண்டி உள்ளது. ஆனால் இந்த மாதம் இன்னும் 30 நாட்கள் இருப்பதால் தஞ்சை மாவட்டத்தில் மழை அளவு சராசரி அளவை விட கூடுதலாக மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருவாரூர் மாவட்டத்தில் வடகிழக்குப்பருவமழை காலக்கட்டமான அக்டோபர், நவம்பர் மாதத்தில் மட்டும் 648 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு இதுவரை 1,123 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. இது சராசரி அளவைக்காட்டிலும் 181 மி.மீட்டர் மழை அதிகமாக பெய்துள்ளது.

சராசரியை விட அதிகம் : நாகை மாவட்டத்தில் வடகிழக்குப்பருவமழை காலக்கட்டமான அக்டோபர், நவம்பர் மாதத்தில் மட்டும் 876 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. நாகை மாவட்டத்தில் இந்த ஆண்டு இதுவரை 1,311 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. இது சராசரி அளவைக்காட்டிலும் 369 மி.மீட்டர் மழை அதிகமாக பெய்துள்ளது. இன்னும் டிசம்பர் மாதம் முழுவதும் இருப்பதால் திருவாரூர், நாகை மாவட்டத்தில் மழை அளவு இன்னும் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. காவிரி டெல்டா மாவட்டங்களில் மட்டும்

வடகிழக்குப்பருவமழை காலக்கட்டத்தில் வழக்கத்தை விட இந்த ஆண்டு 61 சதவீதம் கூடுதலாக மழை பெய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## தொடர் மழை எதிரொலி திருச்சி மார்க்கெட்டில் காய்கறிகள் விற்பனை மந்தம் தக்காளி கிலோ ரூ.20-க்கு விற்பனை



திருச்சி,

தொடர் மழை எதிரொலியாக திருச்சி மார்க்கெட்டில் காய்கறிகள் விற்பனை மந்தமாக உள்ளது. தக்காளி கிலோ ரூ.20-க்கு விற்கப்படுகிறது. தொடர் மழை : திருச்சி காந்தி மார்க்கெட்டுக்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. ஆந்திரா, கர்நாடகா போன்ற வெளிமாநிலங்களில் இருந்து வெங்காயம், உருளைகிழங்கு போன்றவையும் வருகிறது. கடந்த சில நாட்களாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது.

குறிப்பாக சென்னை, காஞ்சீபுரம், கடலூர், புதுச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் தொடர் மழையின் காரணமாக வரத்து குறைந்து திருச்சி மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை உயர்ந்து இருந்தது.

காய்கறிகள் விலை : தற்போது கனமழை காரணமாக சென்னை, காஞ்சீபுரம், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு காய்கறிகள் கொண்டு செல்ல முடியாததால் திருச்சி மார்க்கெட்டுக்கு காய்கறிகள் திருப்பி விடப்பட்டுள்ளன. இதனால் திருச்சியில் காய்கறிகளின் விலை முன்பைவிட ஓரளவுக்கு குறைந்து விற்பனையாகிறது. கிலோ ரூ.100-க்கு விற்பனையான கத்தரிக்காய் தற்போது கிலோ ரூ.60 முதல் ரூ.80 வரை விற்கப்படுகிறது.

தக்காளி கிலோ ரூ.20-க்கு விற்கப்படுகிறது. பீன்ஸ் ரூ.30-க்கும், பீட்ரூட் ரூ.20-க்கும், கேரட் ரூ.40-க்கும், அவரைக்காய் ரூ.50-க்கும், முருங்கைக்காய் ரூ.60-க்கும், உருளைக்கிழங்கு ரூ.25-க்கும், சேனைகிழங்கு ரூ.30-க்கும், சின்ன வெங்காயம் ரூ.50-க்கும், பெரிய வெங்காயம் ரூ.30-க்கும் வெண்டைக்காய் ரூ.25-க்கும், கொத்தவரங்காய் ரூ.30-க்கும், பூசணிக்காய் ரூ.10-க்கும், பரங்கிக்காய் ரூ.10-க்கும் விற்கப்படுகிறது. விற்பனை மந்தம்

இது குறித்து மார்க்கெட் வியாபாரி ஒருவர் கூறுகையில், “தொடர் மழையால் வரத்து குறைந்ததால் கடந்த சில நாட்களாக மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை உயர்ந்து விற்பனையானது. தற்போது சென்னை, கடலூர், புதுச்சேரி, காஞ்சீபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழை காரணமாக காய்கறிகள் சரக்கு போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் சரக்குகள் பல்வேறு மாவட்டங்களுக்கு பிரித்து அனுப்பப்படுகிறது. இதனால் திருச்சி மார்க்கெட்டுக்கு ஓரளவுக்கு காய்கறிகள் வரத்து உள்ளது. ஆனால் தொடர் மழை எதிரொலியாக விற்பனை மந்தமாக உள்ளது. மழையால் பொதுமக்கள் மார்க்கெட்டுக்கு குறைவாகவே வருகிறார்கள்’’ என்றார்.

## அரியலூர் மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட 1,259 பேருக்கு ரூ.68 ½ லட்சம் மதிப்பிலான நிவாரணம் வழங்கப்பட்டுள்ளன கலெக்டர் தகவல்



அரியலூர்,

அரியலூர் மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட 1,259 பேருக்கு ரூ.68½ லட்சம் மதிப்பிலான காசோலைகள் நிவாரணமாக வழங்கப்பட்டு உள்ளன. மேலும் மழை பாதிப்புகளை தடுப்பதற்காக முன்னேற்பாடு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன என மாவட்ட கலெக்டர் சரவணவேல் ராஜ் தெரிவித்தார்.

<u>மழையால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம்</u>

அரியலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததையொட்டி 2.12.2015 வரையில் மாவட்டத்தில் 966.35 மில்லி மீட்டர் மழை அளவு பதிவாகியுள்ளது. வடகிழக்கு பருவமழையினால் மாவட்டம் முழுவதும் 1,259 வீடுகள் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் கால்நடைகளுக்கு நிவாரண நிதியாக ரூ.68 லட்சத்து 55 ஆயிரத்து 900 மதிப்பிலான நிதி உதவித்தொகை உடனடியாக வழங்கப்பட்டது. இதுகுறித்து, மாவட்ட கலெக்டர் சரவணவேல் ராஜ் தெரிவித்ததாவது :–

அரியலூர் மாவட்டத்தில் மழையினால் உயிரிழந்த 4 பேரின் குடும்பங்களுக்கு ரூ.13 லட்சத்து 50 ஆயிரம் உடனடியாக நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.

சிறு பகுதிகள் சேதமடைந்த 1,039 குடிசை வீடுகளுக்கு ரூ.42 லட்சத்து 59 ஆயிரத்து 900 மதிப்பிலான காசோலைகளையும், முழுமையாக சேதமடைந்த 45 குடிசை வீடுகளுக்கு ரூ.2 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பிலான காசோலைகளையும், பகுதி சேதமடைந்த 175 கான்கிரீட் வீடுகளுக்கு ரூ.9 லட்சத்து 10 ஆயிரம் மதிப்பிலான காசோலைகளும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கால்நடை இழப்பீடான மாடு, ஆடு, கோழிகளுக்கு ரூ.1 லட்சத்து 11 ஆயிரம் நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

<u>மழை சேதம் கணக்கீடு</u>

மேலும், வடக்கிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அரசு அலுவலர்களை 40 கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு, அரியலூர், செந்துறை, ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களில் மாவட்ட வருவாய் அலுவலர், உதவி கலெக்டர், திட்ட இயக்குனர் ஆகியோரின் மேற்பார்வையில் குழுஉறுப்பினர்கள் மழைகளால் ஏற்படும் இடற்பாடுகளை கணக்கிட்டு ஆய்வு செய்து, உடனுக்குடன் மாவட்ட அலுவலகத்திற்கு தகவல் கொடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<u>கட்டுப்பாட்டு அறை</u>

மேலும், மழையினால் ஏற்படும் சேதம் தொடர்பாக பொதுமக்கள் உடனுக்குடன் தகவல் தெரிவிக்கும் பொருட்டு மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கட்டணமில்லா தொலைபேசி (எண்.1077) உடைய கட்டுப்பாட்டு அறை செயல்பட்டுவருகிறது. இக்கட்டுப்பாட்டு அறையில் 24 மணிநேரமும் அலுவலகப்பணியாளர்கள் சுழற்சி முறையில் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். அனைத்து வட்ட அலுவலகத்திலும் சேத விவரங்களை பொதுமக்களிடமிருந்து உடனுக்குடன் பெறும் பொருட்டு பணியாளர்கள் சுழற்சி முறையில் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர். மேலும், பொதுமக்கள் தங்கள் பகுதியில் ஏற்படும் பாதிப்புகள் குறித்த தகவல் தெரிவித்தால் உடனடியாக மீட்பு மற்றும் நிவாரண பணிகள் மேற்கொள்ளப்படும். பொதுமக்கள் பாதுகாப்பாகவும், காய்ச்சிய குடிநீரை பருகி பாதுகாப்புடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டம்; விலங்குகள் நல அமைப்புகள் விண்ணப்பிக்கலாம்



சிவகங்கை,

மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டத்தை அரசு கோசலா, விலங்குகள் நல அமைப்புகள் மூலம் செயல்படுத்த உள்ளது. இதற்கு விருப்பம் உள்ள அமைப்பினர் விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட கலெக்டர் மலர்விழி தெரிவித்துள்ளார். தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டம்

சிவகங்கை மாவட்ட கலெக்டர் மலர்விழி விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- கோசலா, விலங்குகள் நல அமைப்புகளில்

கால்நடைகளை பாதுகாக்கவும், பசுந்தீவனத்தை உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையிலும் தமிழக அரசு கால்நடை துறையின் மூலம் நடப்பு நிதியாண்டில் அரசு மானியத்துடன் இந்த அமைப்புகள் மூலம் கீழ்க்கண்ட தீவனப்பயிர் சாகுபடி திட்டங்களை செயல்படுத்த உள்ளது.

அதன்படி பசுந்தீவனமான கம்பு பயிருக்கு ஒரு ஏக்கர் முதல் அதிக பட்சம் 5 ஏக்கர் வரை 90 சதவீதம் மானியமும், கால்நடை தீவன சோளம் சாகுபடி செய்ய ஒரு ஏக்கர் முதல் அதிகபட்சம் 5 ஏக்கர் வரை 90 சதவீதம் மானியம் வழங்கப்படும்.

இந்த திட்டத்தின் கீழ் பயன் பெற விரும்பும் கோசலா அமைப்புகள் 3 ஆண்டுகள் தொடர்ந்து செயல்பாட்டில் இருத்தல் வேண்டும். வருடத்தில் 100 நாட்களுக்கு மேல் கால்நடைகள், பசுக்கள், வெள்ளாடு, செம்மறியாடுகளை பராமரித்தல் வேண்டும். விலங்குகள் நல அமைப்பில் பதிவு செய்து இருக்க வேண்டும்.

தீவன வளர்ப்பிற்கு கடந்த 5 ஆண்டுகளுக்கு முன் விலங்குகள் நல அமைப்பிலோ அல்லது வேறு எந்த தொண்டு நிறுவனத்திடமோ நிதி பெற்று இருக்கக் கூடாது. விண்ணப்பிக்கலாம்

குறைந்தது 2 ஏக்கர் நிலமோ அல்லது குத்தகை காலம் 10 வருடத்திற்கு மேல் இருக்க வேண்டும். தீவனப்பயிர் வளர்ப்பதற்கு மண் பரிசோதனை சான்றினை தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழகத்திலோ அல்லது தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திலோ பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அளிக்க வேண்டும்.

கால்நடைகளை பராமரிப்பதற்கு தகுந்த கொட்டகை இருக்க வேண்டும். மேற்காணும் திட்டங்களின் மூலம் பயன்பெற விருப்பமுள்ள கோசலா அமைப்பினர், விலங்குகள் நல அமைப்பினர் இந்த விதிமுறைகளின்படி சிவகங்கை, கால்நடை பராமரிப்புத் துறை, மண்டல இணை இயக்குனர் அலுவலகத்தை அணுகி விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.